சமூக நலம்
மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2017 – 2018

மானியக் கோரிக்கை எண்.45

**Dr. V. சரோஜா**
சமூக நலம் மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2017

# பொருளடக்கம்


| வ.எண் | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | குழந்தைகள் நலம் | 9 |
| 3 | மகளிர் நலம் | 27 |
| 4 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 67 |
| 5 | முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன் | 96 |
| 6 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 105 |
| 7 | சமூகப் பாதுகாப்பு | 145 |
| 8 | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் | 186 |
| | இணைப்பு – வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | 195 |

## கோரிக்கை எண்.45

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2017–2018

## அத்தியாயம்–1

### முன்னுரை

ஐக்கிய நாடுகளின் பொதுப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட நீட்டித்த வளர்ச்சிக் குறிக்கோள்களின் (Sustainable Development Goals) அடிப்படையில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நிலையை எய்துவதும், வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் சமநிலை அடையவும் குழந்தைகளின் நல் ஊட்டச்சத்தினை எய்தவும் தமிழக அரசு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. மகளிர், குழந்தைகள், மூத்த குடிமக்கள், வயதானோர் மற்றும் மூன்றாம் பாலினரின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைச் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலம் செயல்படுத்தி வருவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

துயருறும் சூழலில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்திட ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956 (Immoral Traffic (Prevention) Act, 1956) மற்றும் இளைஞர் நீதிச்

(குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015) ஆகியன சமூக பாதுகாப்புத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோருக்கு தேவைப்படும் நிறுவனப் பராமரிப்பினை குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள் (Observation Homes), சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள் (After Care Organisations) மற்றும் துன்புறும் துயருறும் சூழலில் உள்ள பெண்களின் மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பிற்காக மகளிர் காப்பகங்கள், பாதுகாப்பு இல்லங்கள், ஸ்வதார் மற்றும் உஜ்ஜவாலா திட்டங்களின் கீழ் குறுகிய கால தங்கும் இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றது.

பெண்களுக்கு அதிகாரமளிக்கும் நடவடிக்கையாக, குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக, பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தவும் பெற்றோர் பெண் குழந்தைகளைப் பெருமிதத்துடன் ஏற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யும் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. பெண் சிசுக்கொலை

என்னும் தீமையைத் தடுப்பதையும், கைவிடப்பட்ட குழந்தைகள் தத்து கொடுக்கப்படும் வரை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பதை உறுதி செய்யும் ஒரு தன்னிகரற்ற திட்டமாக தொட்டில் குழந்தைத் திட்டம் திகழ்கிறது. குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 நன்முறையில் செயல்படுத்தப்படுவதால் பெண் குழந்தையின் சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றை வளரச் செய்வதுடன் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் கருத்தரிக்கும் அபாயத்தைத் தடுக்கிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் முறையே 0–5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கு வாரத்தில் ஐந்து நாட்களில் மசாலா கலந்த முட்டையுடன் 13 வகையான கலவை சாதம் மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு 3 முட்டை வழங்கும் திட்டத்தால் அவர்களது ஊட்டச்சத்து அளவு மற்றும் உணவு ஆற்றலளவு உயர்த்தப்பட்டது, மத்திய அரசால் பாராட்டப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஊட்டச்சத்து, முன்பருவக்கல்வி, சுகாதாரம் மற்றும்

குழந்தைகளின் தன்சுத்தம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய வழிகாட்டித் திட்டமாக செயல்படுகிறது. இத்திட்டம் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், குழந்தைகள் மற்றும் மகளிர் நலம் பேணுதல், வளரிளம் பெண்களின் மேம்பாடு மற்றும் சமச்சீரான வளர்ச்சியினை அடைதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் பிறந்தது முதல் ஆறு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இணை உணவு, சூடான சமைத்த உணவு வழங்குதல், சுகாதாரம் பேணுதல் மற்றும் முன்பருவக் கல்வி வழங்குதல், பெண்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்குதல் போன்ற விரிவான நலப் பணிகளை வழங்குகிறது. உடல் நலம், கல்வி விழிப்புணர்வு மற்றும் அறிவுத் திறனை மேம்படுத்துவதுடன் வளரிளம் பெண்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவும் வழங்கப்படுகிறது. மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்படி, அங்கன்வாடி மையங்கள், “எழுச்சிமிகு முன்பருவக் கல்வி வளர்ச்சி மையங்களாக” செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் கற்றல், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கும் முதல்நிலை

மையங்களாக செயல்பட ஏதுவாக கூடுதல் மனிதவளம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறை மகளிரின் பாதுகாப்பிற்கும், சமூக பொருளாதார அதிகார பகிர்விற்கும் முதலிடத்தை அளிப்பதுடன், பண்பாட்டுத் தேவையினை அங்கீகரிக்கும் விதமாக முக்கிய திட்டங்களாக ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்துகின்றது. இதனால் பெண்கள் மற்றும் ஏழைப் பெற்றோர்களின் கண்ணியமான நிலையினை உறுதி செய்வதுடன் பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கின்றது.

10ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த பெண்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் ₹25,000 மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் ₹50,000 நிதியுதவியாக அரசால் வழங்கப்பட்டு வந்தது. இதனால், இத்திட்டத்தின் மூலம் 55 சதவிகித பெண்கள் ஆர்வத்துடன் உயர்கல்வி கற்பது ஊக்குவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டங்கள் குறிப்பாக ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களின் மகள்கள், ஆதரவற்ற

பெண்கள், கலப்புத் திருமணம் புரிந்த தம்பதியர், விதவையரின் மகள் மற்றும் மறுமணம் புரியும் விதவையர் ஆகியோருக்காக செயல்படுத்தப்படுகிறது. **23.05.2016** முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு வழங்கப்படும் தங்க நாணயத்தின் அளவானது **8** கிராமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மூன்றாம் பாலினரின் வாழ்வாதாரத்திற்காக நிதியுதவி வழங்குவது உட்பட பல்வேறு நடவடிக்கைகள் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் ஆதரவற்ற பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பாதுகாப்புடன் தங்க இயலும். அதே சமயத்தில் அவர்கள் கல்வி மற்றும் தொழிற்பயிற்சியைத் தொடரலாம். குறைந்த வருவாயை ஈட்டும் பணிபுரியும் பெண்களுக்கு, அவர்களால் இயன்ற வாடகையில் பாதுகாப்பாக தங்குவதற்கு பணிபுரியும் மகளிருக்கான அரசு தங்கும் விடுதிகளும் இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்கள் தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில், தமிழக அரசு இலவச தையல் இயந்திரங்களை வழங்கி வருகிறது. இம்மாநிலத்தில் மதிய உணவு உட்கொள்ளும் குழந்தைகளுக்கு வழங்குவதற்காக

நான்கு இணை பள்ளிச் சீருடைகளை தைக்கும் பணிகளில் 98 மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்களின் கீழ், 75,807 பெண் உறுப்பினர்கள் தங்களது வீட்டிலிருந்தபடியே தொழிலில் ஈடுபட்டு வருவதன்மூலம் தேவையான வருமானத்தை ஈட்டுகின்றனர்.

வருவாய் நிருவாக ஆணையரகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் ஒருங்கிணைப்பு முகமையாக இத்துறைச் செயல்பட்டு வருகிறது.

பெண்கள் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் மிகப்பெரிய சாதனைகள் புரிந்திருந்தாலும் சமூகத்தில் அவர்களுக்கு எதிராக தற்போதும் நிலவி வரும் பாகுபாட்டின் பிரதிபலிப்பே பாலின அடிப்படையிலான வன்கொடுமை ஆகும். நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் முழுமையாக பங்கேற்பதற்கு, வன்முறை மற்றும் வன்முறையால் ஏற்படும் அச்சம் போன்ற காரணகிள் தடையாக உள்ளன. மேற்படி காரணிகளைக் கருத்திற்கொண்டு, பாலின சமத்துவத்தை உறுதி செய்வதற்காக அரசு பெண்களை பாதுகாக்கும் சட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கிறது. ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956, வரதட்சணை தடுப்புச் சட்டம்,

1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம், 2006, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012, பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் சீர்படுத்தும்) சட்டம், 2013, தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 போன்ற பல்வேறு சட்டங்கள் இத்துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை வாழ்க்கையின் அனைத்து தரப்பு மக்கள் குறிப்பாக ஏழை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக செயல்படுகிறது. பல ஆண்டுகளாக பல்வேறு நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதன் மூலம் நமது மாநிலத்தில் மனிதவள மேம்பாட்டில் இத்துறை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

*******

## அத்தியாயம் – 2

# குழந்தைகள் நலம்

**2.1** தமிழக அரசு சமூக நலனுக்காக குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகளுக்காக பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைப் பொறுத்தே ஒரு நாட்டின் எதிர்காலம் அமைகிறது. தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் போது குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பினை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுகிறது. சமூகத்தில் பெண் குழந்தைகள் சமநிலையை அடைவதற்காக பெண் குழந்தைகள் குறித்த பிரச்சனைகள் மீது அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழித்திடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட தன்னிகரில்லாத் திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டம் மற்றும் பெண்குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட “பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்’’ பெண் குழந்தைகளின் அனைத்து நலன்களையும் உறுதி செய்யும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பெண் கல்வியை மேம்படுத்தவும், பெண் சிசுக் கொலையை அறவே ஒழிக்கவும், ஆண் குழந்தைகளை விரும்பும்

மனப்போக்கை மட்டுப்படுத்தவும், சிறு குடும்ப நெறிமுறையை ஊக்குவிக்கவும் 1992 ஆம் ஆண்டு, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டம் துவக்கப்பட்டது.

குழந்தைகளின் மிக அத்தியாவசிய தேவைகளான ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் கல்வி போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் வகுக்கப்படுவதன் மூலம் அவர்கள் ஆரோக்கியமாகவும், உரிய மதிப்புடன் வளர்வதற்கு தக்க வாய்ப்புகளையும் ஏராளமான வசதிகளையும் அரசு உருவாக்கி தந்துள்ளது.

இத்திட்டம் பெண் கல்வியினை முன்னிறுத்தி செயல்படுத்தப்படுவதால், 2001 ஆம் ஆண்டு 64.43% இருந்த பெண் கல்வி விகிதம் மேன்மை அடைந்து, 2011 ஆம் ஆண்டு 73.44% ஆக உயர்ந்துள்ளது. இப்பெண் கல்வி மேலும் முன்னேற்றம் அடையும் வகையில் அரசின் மூலம் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. தொட்டில் குழந்தைத் திட்டம்
2. பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்
3. பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்
4. குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006
5. பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்


6. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் காப்பகங்கள்

## 2.2 தொட்டில் குழந்தைத் திட்டம்

பெண் குழந்தைகளின் நலனுக்காக ஒரு மகத்தான திட்டமான "தொட்டில் குழந்தைத் திட்டம்" 1992–ல் சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கம் தமிழ் நாட்டில் ஒரு சில பகுதிகளில் காணப்படும் 'பெண் சிசுக்கொலை' என்னும் கொடிய பழக்கத்தை அறவே ஒழிப்பதும், பெண் குழந்தைகளைப் பாதுகாப்பது மற்றும் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை உயர்த்துவது குறித்தது ஆகும். இத்திட்டத்தின் மூலம் மீட்கப்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கும் பொருட்டு அக்குழந்தைகள் அரசிடம் ஒப்படைக்கப்படுவர்.

பெண் சிசுக்கொலையானது, வறுமை காரணமாகவும், ஆண் குழந்தையை விரும்புவதாலும், பெண் குழந்தைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு குறைவாக உள்ளதாலும், திருமணம் மற்றும் பிற கலாச்சார நடைமுறைகளில் ஏற்படும் செலவுகள், சமூகத்தின் மூலம் எதிர்பார்த்திருக்கும் செலவுகள் மற்றும் உடல் உறுப்பு குறையுடன் பிறக்கும் குழந்தைகளைப் பராமரிக்க இயலாமை போன்றவை பெண் சிசுக்கொலைக்கான காரணங்கள் ஆகும்.


2001 ஆம் ஆண்டில் இத்திட்டம் மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பெண் சிசுக்கொலை நடைமுறையில் அதிகமாக இருந்ததால் நீட்டிக்கப்பட்டது. சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் குழந்தைப் பாலின விகிதம் மேற்படி மாவட்டங்களில் உயர்ந்துள்ளது.




| | சேலம் | மதுரை | தேனி | திண்டுக்–கல் | தருமபுரி |
|---|---|---|---|---|---|
| கணக்கெடுப்பு 2001 | 851 | 926 | 891 | 930 | 826 |
| கணக்கெடுப்பு 2011 | 917 | 939 | 937 | 942 | 911 |

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் குறைவாக இருந்ததால் மேற்கண்ட மாவட்டங்களிலும்

தொட்டில் குழந்தைத் திட்டம் **2011** ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்தப்பட்டது.




| | கடலூர் | அரியலூர் | பெரம்பலூர் | விழுப்புரம் | திருவண்ணாமலை |
|---|---|---|---|---|---|
| கணக்கெடுப்பு 2001 | 957 | 949 | 937 | 961 | 948 |
| கணக்கெடுப்பு 2011 | 895 | 892 | 913 | 938 | 932 |

மேற்கண்ட மாவட்டங்களில் வரவேற்பு மையங்கள் திறக்கப்பட்டன. பல்வேறு சமூக சூழ்நிலைகளின் காரணமாக பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்ட தொட்டில்கள் மூலம் பெறப்பட்டன.

தொட்டில் குழந்தைத் திட்டம் தொடங்கியது முதல் மார்ச் 2017 வரை 5,024 குழந்தைகள் (ஆண் – 966, பெண் – 4058) வறுமையில் வாடும் பெற்றோர்கள் மற்றும் ஒற்றை தாய்மார்கள் குழந்தைகளை ஒப்படைத்துள்ளார்கள்.

2001–ஆம் ஆண்டு 942/1000 என்றிருந்த பெண் குழந்தைகளின் பாலின விகிதம் தமிழ்நாட்டில் தொட்டில் குழந்தைத் திட்டம் உருவானதன் விளைவாக 2011–ஆம் ஆண்டு 943/1000 ஆக அதிகரித்துள்ளது.

**2017–18ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.3 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

1992ஆம் ஆண்டு துவக்கப்பட்ட முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், பெண் குழந்தைகளின் நலனுக்கான முன்னோடி மற்றும் வழிகாட்டும் திட்டமாகும். முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் நோக்கம் பெண் குழந்தை பாலின பாகுபாட்டைத் தடுத்து அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அரசால் நேரடியாக உதவி புரிவதாகும்.

**திட்டத்தின் நோக்கங்கள்**

- பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், அவர்களுக்கு குறைந்த பட்சம் 10ஆம் வகுப்பு வரை கல்வியைப் பயிலுவதற்கு ஊக்குவித்தல்.
- 18 வயதுக்கு பிறகே திருமணம் செய்து கொள்ளும் கருத்தினை பெண் குழந்தைகளிடம் ஊக்குவித்தல்.
- இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தவுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டும் என்று பெற்றோர்களிடம் ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் நிதி நிலையில் அதிகாரத்தினை வழங்குதல்.
- பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்த குடும்பத்தின் பங்கினை பலப்படுத்துதல்.

**இத்திட்டத்தின் கீழ் வைப்புத் தொகை வழங்கப்படும் முறை**

**திட்டம்–1**

இத்திட்டத்தின் கீழ் 01.08.2011 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்து குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை மட்டும் இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக ₹50,000/– தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டம்–2**

இத்திட்டத்தின் கீழ் **01.08.2011** அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்து, குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் நிலையான வைப்புத் தொகையாக தலா **₹25,000/–** தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தைகளின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

மேற்படி வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு **18** வயது நிறைவடைந்ததும் திரண்ட வட்டி விகிதத்துடன் கூடிய வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை, அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படுகிறது. இப்பயனை அடைய பெண் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத் தேர்வு எழுதியிருத்தல் வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தைக்கு உயர்கல்வி பயில உதவுகிறது.

**முதிர்வுத் தொகை விவரம்**

| வ. எண். | திட்டங்கள் | ஆரம்ப வைப்பீட்டுத் தொகை (₹) | 18 வயது நிறைவடையும் போது முதிர்வுத் தொகை ₹1,800 ஊக்கத்தொகை உட்பட தோராயமாக (₹) |
|---|---|---|---|
| 1 | திட்டம்–1 | 50,000 | 3,00,232 |
| 2 | திட்டம்–2 | 25,000 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) | 1,50,117 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) |

வைப்பீடு செய்யப்பட்ட ஆறாவது ஆண்டிலிருந்து கல்விச் செலவுக்காக ஆண்டுதோறும் ஊக்கத்தொகையாக ₹1,800 வழங்கப்பட்டு வருகிறது.

2013–14 ஆம் நிதியாண்டு முதல் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பயன்கள், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1992 முதல் 1995 ஆம் ஆண்டு வரை பதிவு செய்த பயனாளிகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உள்ள இரண்டு திட்டங்களுக்கும் ஆண்டு வருமான உச்சவரம்பு 14.10.2014 முதல் ₹24,000/–லிருந்து ₹72,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் சாதனைகள்**

தமிழ்நாட்டில் பெண் கல்வியின் முன்னேற்றம் 2001 ஆம் ஆண்டில் 64.43 சதவிகிதத்தில் இருந்து 2011–ஆம் ஆண்டில் 73.44 சதவிகிதமாக உயர்ந்துள்ளதற்கும், பள்ளிக்கு சென்ற

பெண் குழந்தைகளின் இடைநிறுத்தல் குறைந்ததற்கும் இத்திட்டம் முக்கிய காரணியாக உள்ளது. **1997–2017** வரை **8,68,218** பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். **₹1,259.32** கோடி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**2017–18ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹14,013 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.4 பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்

பெண் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கவும் அவர்களின் கல்வியினை உறுதி செய்யவும் "பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்" (Beti Bachao Beti Padhao) என்ற திட்டம் **2015** ஆம் ஆண்டு ஜனவரி **22**ஆம் நாள் முதன்முதலாக அரியானா மாநிலம், பானிப்பட்டில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்பு அமைச்சகமாக செயல்படுகிறது.

**2011** ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு புள்ளி விவரத்தின்படி குழந்தைப் பாலின விகிதம் (Child Sex Ratio) மிகவும் குறைந்து காணப்பட்டு தேசிய

அளவில் **1000** ஆண் குழந்தைகளுக்கு, **919** பெண் குழந்தைகளே உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதன் காரணமாக குழந்தைப் பாலின விகிதம் குறைவாக உள்ள **100** மாவட்டங்கள் கண்டறியப்பட்டு அதில் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் மாநில அளவில் குறைந்தது ஒரு மாவட்டம் முன்னோடி மாவட்டமாக இத்திட்டத்தைச் செயல்படுத்த தேர்தெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், ''பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிப்போம்'' என்ற திட்டத்தைச் செயல்படுத்த குழந்தைப் பாலின விகிதம் மிகவும் குறைவாக உள்ள கடலூர் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவில் உள்ள **919/1000** குழந்தை பாலின விகிதத்தைவிட தமிழ்நாட்டில் **943/1000** என சற்று உயர்வாகவே உள்ளது.

கடலூர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா குழந்தை பாலின விகிதம் கீழ்கண்டவாறு:-

| | **கணக்கெடுப்பு 2001** | **கணக்கெடுப்பு 2011** |
|---|---|---|
| இந்தியா | **927** | **919** |
| தமிழ்நாடு | **942** | **943** |
| கடலூர் | **957** | **896** |

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

- கருவில் இருக்கும் குழந்தைப் பாலினத்தை கண்டறிவதை முற்றிலும் அகற்றுதல்.

- பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்புடன் கூடிய நல்வாழ்வினை உறுதி செய்தல்.
- பெண் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதை உறுதிப்படுத்துதல்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திட்டத்தினை செயல்படுத்தும் தலைவர் ஆவர்.

**திட்டத்தின் சாதனைகள்**

1. கடலூர் மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் **2015–ல் 886** ஆக இருந்தது **2016–ல் 895** ஆக உயர்ந்துள்ளது.
2. உயர் தொடக்கப் பள்ளி (மாணவிகள்) இடை நிறுத்தம் செய்வது **2015**ல் **1.5** சதவிகிதமாக இருந்தது **2016**ல் **1.0** சதவிகிதமாக குறைந்துள்ளது.
3. இடை நிலைப் பள்ளி (மாணவிகள்) இடைநிறுத்தம் செய்வது **2015**ல் **3.26** சதவிகிதமாக இருந்தது **2016**ல் **1.5** சதவிகிதமாக குறைந்துள்ளது.
4. சுகன்யா சம்ருதி யோஜனா திட்டத்தின் கீழ் **59,491** குழந்தைகளுக்கு வங்கிக் கணக்கு துவக்கப்பட்டுள்ளது.
5. பள்ளிகளில் ஒட்டுமொத்த கட்டமைப்பு வசதிகள், அதாவது உறைவிட பள்ளி, கழிப்பறை, தண்ணீர் வசதிகள் மற்றும் எரியூட்டிகள் அமைத்தல் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**விருது**

கடலூர் மாவட்டம் சிறந்த மாவட்டமாக இத்திட்டத்தைச் செயல்படுத்தியதற்கு தேர்வு செய்யப்பட்டு ‘‘சிறந்த சமூக ஈடுபாட்டிற்காக’’ டெல்லியில் **24** ஜனவரி **2017** அன்று நடைபெற்ற தேசிய பெண் குழந்தைகள் தின விழாவில்

மாண்புமிகு அமைச்சர், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு அவர்களால் தேசிய விருது வழங்கப்பட்டது.

**2.5 குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் , 2006**

இந்திய சட்டத்தின்படி 18 வயதிற்கும் கீழ் உள்ள பெண் குழந்தைக்கும், 21 வயதிற்கும் குறைவாக உள்ள ஆண் குழந்தைக்கும் நடைபெறும் திருமணம் குழந்தைத் திருமணம் ஆகும். பெரும்பாலான குழந்தைத் திருமணங்கள் சமூக மற்றும் பொருளாதார வசதி குறைவு மற்றும் குழந்தைத் திருமணத்தின் தீய விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ள குடும்பங்களில் நடைபெறுகிறது.

அரசு மற்றும் சமுதாயத்தால் இதனை ஒழிப்பதற்காக பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், இந்தியாவில் குழந்தைத் திருமணம் இன்னும் ஒரு பொதுவான நிகழ்வாகவே இருந்து வருகிறது. சமூகத்தில் நடைபெற்றுவரும் குழந்தைத் திருமணத்தை அறவே ஒழிப்பதற்காக, மத்திய அரசால் 1929–ல் இயற்றப்பட்ட குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்கும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கும் மற்றும் இச்சட்டத்தை மீறி அத்தகைய திருமணங்கள் நடத்துபவர்கள், நடத்துவதற்கு

ஏற்பாடு செய்பவர்கள் மீது தகுந்த தண்டனையை அளிப்பதற்கு இச்சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**சட்டத்தைச் செயல்படுத்துதல்**

குழந்தைத் திருமண தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில விதிகளை வகுத்து அதனை **30.12.2009** அன்று அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூகநல அலுவலர்கள் குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமண தடுப்பு அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அவர்கள் குழந்தைத் திருமணம் நடைபெறுவது குறித்த ஏதேனும் தகவல் எவ்வகையில் கிடைக்கப் பெற்றாலும், புகாரினை ஏற்று, அத்தகைய குழந்தைத் திருமணத்தினை இரத்து செய்திட மாவட்ட நீதிமன்றத்தில் புகாரினை பதிவு செய்வதோடு மற்றும் குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பெற்று வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், அது குறித்து தெரிவித்திடவும், ஊராட்சித் தலைவர் அவர்களின்

தலைமையில், ஊராட்சி அளவிலான குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள்**

1. பொம்மலாட்டம், தெருக்கூத்து, ஊர்வலம் மற்றும் கருத்தரங்கம் போன்ற பல்வேறு முறைகளில் குழந்தைத் திருமணம் தொடர்பான விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுகிறது.

2. குழந்தைத் திருமணம் என்னும் கொடுமையிலிருந்து பெண் குழந்தைகளை பாதுகாப்பதற்காக, குழந்தைத் திருமணம் தொடர்பான விளம்பரப்படம் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. மத்திய அரசால் இவ்விளம்பரப் படம் தொலைக்காட்சியில் ஆங்கில துணைத் தலைப்புடன் ஒளிப்பரப்பு செய்யப்பட்டது.

3. பெண் குழந்தைகளின் கல்வியை மையமாக கொண்டு தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. குழந்தைத் திருமணத்தை அடியோடு ஒழித்திடும் நோக்கத்தில் திருமண நிதியுதவித் திட்டங்கள் பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும் போது பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

4. 13 மாவட்டங்களில் யுனிசெப் (UNICEF) நிதி உதவியுடன் குழந்தைத் திருமணத்தை எதிர்த்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.

5. குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் மற்றும் விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சட்டமும் விதிகளும் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக

விநியோகம் செய்யப்பட்டன. 2008ஆம் ஆண்டில் இருந்து தமிழகத்தில் சுமார் 5,037 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

## 2.6 பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

பெற்றோர்கள் தங்களின் வேலை நிமித்தமாக குழந்தைகளைப் பராமரிக்க இயலாத நிலையில் பகல் நேரங்களில் பாதுகாப்பாக பராமரிக்கப்படும் இடம் குழந்தைகள் காப்பகம் ஆகும். தமிழ்நாட்டில் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கு உதவிட குழந்தைகள் காப்பகங்கள் அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெற்றோர்களின் 0–5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். குழந்தைகளுக்கு இணை உணவுடன் கல்வியும் இக்காப்பகங்களில் வழங்கப்படுகிறது.

பணிபுரியும் தாய்மார்களுக்கு மட்டுமல்லாது, நோய்வாய்ப்பட்ட மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பத்தில் உள்ள தாய்மார்கள் வீட்டிலும், வெளியிலும் பல்வேறு பணிகளுக்கிடையில் குழந்தையைப் பராமரிப்பதில் சிரமப்படுவதால், அவர்களுக்கு உதவிடும் வகையில், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மாநில அரசு மானியத்துடன் 6 குழந்தைகள் காப்பகங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கன்னியாகுமரி, சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 4 மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. 25 குழந்தைகளுடன் இயங்கும் ஒரு காப்பகத்திற்கு, அரசு மானியமாக ஆண்டொன்றிற்கு ₹25,410 வழங்கப்படுகிறது.

**2017–18 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ₹3.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.7 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

இத்துறையின் மூலம் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்காக 4 இல்லங்கள் கீழ்காணும் மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

1. பிரேமவாசம், காஞ்சிபுரம்
2. ஸ்ரீஅருணோதயம் டிரஸ்ட், சென்னை
3. குழந்தைகளுக்கான குடும்பங்கள், கோயம்புத்தூர்
4. கம்யூனிட்டி ஹெல்த் எஜுகேஷன் சொசைட்டி (CHES), திருவள்ளூர்

தற்போது இல்வில்லங்களில் 137 குழந்தைகளுக்கு தேவையான பராமரிப்பு மற்றும் வசதிகள் அளிக்கப்படுகின்றன. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பராமரிப்பிற்காக

ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ₹120 வீதம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**********

## அத்தியாயம்–3

# மகளிர் நலம்

**3.1** பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளைக் களையும் உடன்படிக்கை (Convention on Elimination of all forms of Discrimination Against Women), நீட்டித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (Sustainable Development Goals), தேசிய பெண்கள் மேம்பாட்டுக் கொள்கை மற்றும் மாநிலத்தின் இலக்கு **2023** ஆகியவற்றிற்கேற்ப மாநிலத்தில் உள்ள பெண் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள் மற்றும் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு அதிகாரமளித்திட பல்வேறு முயற்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதில் நாட்டில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

ஆதரவற்ற பெண்கள், விதவைகள், ஆதரவற்ற குழந்தைகள், உதவி தேவைப்படும் முதியோர்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கியுள்ளவர்களான மூன்றாம் பாலினர் ஆகியோர் சமூக சமநிலையை அடைந்திடவும் போதுமான சமூகப் பாதுகாப்பினை வழங்குவதற்கும் கவனம் அளிக்கப்படுகிறது. வாழ்வாதாரம் அற்றவர்களுக்கு உணவு, உறைவிடம், மருத்துவ வசதி மற்றும் கல்வி ஆகியன சேவை இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்கள் மூலமாக

வழங்கப்படுகின்றன. இதனால் மாநிலத்தில் நலிவுற்ற சமூகத்தினரது சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி அறிவு ஆகியவற்றிற்கான குறியீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், பெண்கள் நலம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், மாநிலத்தின் வளர்ச்சித் திட்டத்தில் முன்னுரிமை பெற்று இருக்கின்றது. திருமண நிதியுதவித் திட்டங்கள், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதுடன் திருமணத்தின் போது பெண்களது பெற்றோர்களுக்கு நிதியுதவியும் வழங்குகிறது. தமிழ்நாட்டில், பெண் கல்வியை மேம்படுத்தி பெண் குழந்தைகளின் பள்ளி இடைநிறுத்தல் விகிதத்தினை குறைப்பதிலும் இத்திட்டங்கள் நேர்மறை விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

ஏழை பெண்களின் திருமணத்திற்காக முன்னோடி திட்டமான திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் பட்டதாரி அல்லாதவர்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவியாக ₹25,000மும், பட்டதாரி மற்றும் பட்டயப்படிப்பு படித்தவர்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவியாக ₹50,000மும் 17.05.2011 முதல் 22.05.2016 வரை வழங்கப்பட்டு வந்தது.

23.05.2016 முதல் ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் திருமாங்கல்யம் செய்திட வழங்கப்பட்டு வந்த 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்தின் எடையை உயர்த்தி 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஏழ்மை நிலையிலுள்ள குடும்பத்தினர் அதிக அளவில் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றிட அவர்களது ஆண்டு வருமானமானது ₹24,000லிருந்து ₹72,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சமூகத்தில் ஆதரவற்ற பெண்கள் அவர்களின் குழந்தைகளுடன் பாதுகாப்பான சூழலில் வசிப்பதையும், அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்வதையும் உறுதி செய்யும் வகையில், அரசால் சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த சேவை இல்லங்களில் ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் போன்றவர்களுக்கு, உறைவிடம், உணவு, கல்வி, திறன் மேம்பாட்டு பயிற்சி போன்றவை வழங்கப்படுவதால் அவர்கள் சமூகத்தில் நம்பிக்கையுடனும், கண்ணியத்துடனும் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக வாழ்க்கையை எதிர்நோக்க உதவிகரமாக உள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய மிகவும் நலிவடைந்த நிலையிலுள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து, வருவாயைப் பெருக்கும் வகையில், தொழிற்கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக அவர்கள் சேர்க்கப்பட்டு உகந்த பயிற்சிகள் அளிப்பதன் மூலம், பள்ளி குழந்தைகளுக்கான நான்கு இணை சீருடைகள் தைக்கும் பணி வழங்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமூதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள மூன்றாம் பாலினத்தவரின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில், பல்வேறு நலத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்காகவும், பெண்களின் உரிமையைப் பாதுகாக்கவும், பல்வேறு சமூக சட்டங்கள் இத்துறையின் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவை வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் சீர்படுத்தும்) சட்டம், 2013, பெண்கள்

மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த புகார்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் மீதான நடவடிக்கைக்கு பெண்களுக்கான மாநில மகளிர் ஆணையம் 1993 முதல் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகிறது.

## 3.2 திருமண நிதி உதவித் திட்டங்கள்

தமிழகத்தில் பல்வேறு சமூகத்தினரால் மணப் பெண்ணிற்கு திருமணத்தின் போது தங்கத்தினால் திருமாங்கல்யம் அணிவிப்பது என்பது கலாச்சார பழக்க வழக்கமாகும். திருமணத்தில் ஏனைய செலவுகளுடன் தங்கத்தின் விலை பெற்றோர்களுக்கு ஒரு சுமையாகவே உள்ளது. எனவே, ஏழை பெற்றோர்களுக்கு உதவும் பொருட்டும், அவர்கள் தங்களது பெண்களை உரிய வயதில் படிக்க வைப்பதை ஊக்குவிக்கும் பொருட்டும் திருமண நிதி உதவி திட்டங்கள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏழைப் பெற்றோரின் மகள், ஆதரவற்ற பெண்கள், மறுமணம் செய்து கொள்ளும் விதவையர், விதவையரின் மகள், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதியர் ஆகியோருக்கு

உதவிடும் வகையில் தமிழக அரசால் ஐந்து வகையான திருமண நிதி உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2011–12–ல் 28% ஆக இருந்த பட்டதாரி பயனாளிகளின் எண்ணிக்கை 2016–2017ஆம் ஆண்டில் 60% ஆக அதிகரித்துள்ளது.

2016–2017–ஆம் நிதியாண்டில் ஐந்து வகையான திருமண நிதி உதவித் திட்டங்களின் கீழ் 1,52,500 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

### 3.2.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

18 வயது பூர்த்தி அடைந்த ஏழைப் பெண்களின் திருமணத்தின் போது, திருமண நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற பெண்கள் 10–ஆம் வகுப்பும், பழங்குடி இனத்தவராக இருந்தால் 5 ஆம் வகுப்பு வரையும் படித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதியுதவியும் வழங்குவதுடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 23.05.2016 முதல் 1 சவரன் (8கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பெற்றோர்கள் இறந்து விட்ட நிலையில் மகளுக்கு நேரடியாக இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்

அடைவதற்கு குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000 க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2017 – 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹67,078.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.2.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்

பெண்களுக்கான மேம்பாடு மற்றும் உரிமைகளை ஏற்படுத்துவதற்கான புதிய ஆரம்பமாக விதவைகள் மறுமணம் செய்து கொள்வதால், இளம் விதவைகளின் வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வருகிறது. இளம் விதவைகளுக்கு சமூகத்தில் சமூக ஏற்பு மற்றும் கௌரவத்தையும் அளிக்கும் பொருட்டு தமிழக அரசால் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியில் ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதியுதவியில் ₹30,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்குவதுடன் 23.05.2016 முதல் 1 சவரன் (8கிராம்)

22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு வருமான வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**2017–2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹76.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.2.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்

ஏழை விதவை தாய்மார்களுக்கு அவர்களது மகளின் திருமணத்திற்கு உதவிடும் வகையில் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விதவையர் தம் மகளுக்கு திருமணம் செய்ய உதவிடும் வகையில் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000மும், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000மும், அத்துடன் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2017–2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹3,771.09 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.2.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்**

ஆதரவற்ற ஏழை பெண்களின் திருமணத்திற்கு உதவி புரியும் பொருட்டு அரசால் அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டதாரியல்லாத பெண்களுக்கு ₹25,000மும், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000மும், திருமண நிதியுதவியாக வழங்கப்படுவதுடன் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கு வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**2017 – 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹373.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.2.5 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்**

சாதி அடிப்படையிலான வேறுபாடுகளைக் களையவும் சமுதாயத்தினரிடையே சமூக சமத்துவத்தை ஊக்குவிக்கும்

பொருட்டு அரசால் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கலப்புத் திருமணம் செய்யும் தம்பதியரில் பட்டதாரியல்லாதோருக்கு வழங்கப்படும் ₹25,000 நிதி உதவித்தொகையில் ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதி உதவித் தொகையில், ₹30,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்குவதுடன் 23.05.2016 முதல் 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் பெற கல்வித் தகுதி மற்றும் வருமான வரம்பு எதுவும் தேவையில்லை.

**கலப்புத் திருமணத்தின் வகைகள்**

**திட்டம் – I**

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற கலப்புத் திருமண தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தவராகவும், மற்றொருவர் பிற இனத்தை சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**திட்டம் – II**

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற கலப்புத் திருமணம் செய்பவர்களில் ஒருவர் முற்பட்ட அல்லது இதர

வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

**2017 –2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1,100.41 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.3 அரசு சேவை இல்லங்கள்

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்டு, குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு, பராமரிப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசால் அரசு சேவை இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்று என தமிழகத்தில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு சூழல்களால் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த பெண்கள் அவ்விடத்திலேயே குழந்தைகளுடன் தங்கி தொடர்ந்து கல்வி பயில ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இந்த சேவை இல்லங்கள், இல்ல உறைவாளர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள்

ஆகியவற்றை அளிக்கின்றன. இவர்களில் பெண் குழந்தையாக இருந்தால் 12ம் வகுப்பு வரையிலும், ஆண் குழந்தையாக இருந்தால் 5 ஆம் வகுப்பு வரையிலும் சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயிலலாம். உள்ளுறைவோர்களது திறமையை மேம்படுத்துவதற்காக தொழிற்கல்வி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆங்கிலம் பேசும் திறன், கணினி பயிற்சி, எதிர்காலத்தில் உயர் கல்வி படிப்பது, வாழ்க்கைத் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் இவ்வில்லங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசு சேவை இல்லங்களில் தங்கியுள்ள மகளிர் மற்றும் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் ஏழைப் பெண்கள் அதிகளவில் பயனடையும் வகையில் ஆண்டு வருமானம் ₹24,000லிருந்து ₹72,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**2017 –2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹524.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.3.1 பெண்களுக்கான உயர்கல்வித் திட்டம்

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண் குழந்தைகள் உயர்கல்வி பயின்றிட ஊக்கப்படுத்துவதோடு தொழிற்சார் கல்வி பயின்றிட ₹50,000 மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்திட ₹30,000 என்று நிதியுதவி அரசால் வழங்கப்படுகின்றது.

**2017 – 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹33.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.3.2 இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் காப்பகத்தில் மேல்நிலைப் படிப்பு முடித்த மாணவிகள், அவர்களின் வாழ்க்கை தர உயர்வு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு தயார்படுத்தும் வகையில் தாம்பரத்தில் உள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கப்படுகின்றனர். இந்த இல்லத்தில் ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவிகள் இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆசிரியர் பயிற்சி மாணவிகளை கல்வி சுற்றுலா, அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படுவதால் வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள், அருங்காட்சியகங்கள், அறிவியல் கண்காட்சிகள், உயிரியல் பூங்காக்கள், கேளிக்கைப்

பூங்காக்கள் போன்ற இடங்களை பார்வையிட வாய்ப்பு ஏற்படுகிறது. சேவை இல்லத்தில் தங்கி கல்வி பயிலும் பெண் குழந்தைகளுக்கு கூடுதலாக இடவசதி ஏற்படுத்த புதிய துயிற்கூடம் உள்ளுறைவோர்கள் தங்கும் பொருட்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு ₹ 1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

**2017 –2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹9.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.4 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்**

நகரம் மற்றும் பேரூர்களில் இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால் அவர்கள் தங்களுடைய பணி நிமித்தமாக தங்கள் வீட்டை விட்டு வெளியே தங்க வேண்டிய கட்டாயத்தில் உளளனர். அதனால், நகரங்களில் அவர்களுக்கு தங்களால் இயன்ற வாடகையில் அச்சமில்லாமல் பாதுகாப்பான சூழலில் உள்ள தங்கும் விடுதி தேவைப்படுகிறது. மாநிலத்தில், 18 மாவட்டங்களில், 28 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் நடத்தப்படுகின்றன. சென்னையில் மாதம் ₹25,000 வரை பொருளீட்டும் பணிபுரியும் மகளிரும், பிற இடங்களில் ₹15,000 வரை பொருளீட்டும் மகளிரும் இவ்விடுதிகளில் தங்கி பயன்பெற தகுதியுடையவராவர். சென்னையில் உள்ள விடுதிகளில் தங்கிட ₹300ம் பிற இடங்களில் உள்ள விடுதிகளில்

தங்கிட ₹200ம் மாத வாடகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உணவுக் கட்டணம், மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் போன்ற செலவினங்கள் பகிர்ந்தளித்தல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த விடுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

**2017–2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹117.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 3.5 மகளிரின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள்

தமிழ்நாடு அரசு மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பல்வேறு சமூக பொருளாதார திட்டங்களை, கூட்டுறவு சங்கங்களின் மூலம் செயல்படுத்தி வருகிறது. மகளிருக்கு அதிகார பகிர்வு அளிப்பு என்பது அவர்களுடைய பொருளாதார தேவையினைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், அவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்காக அவர்களது திறன் மற்றும் அறிவினை மேம்படுத்துவதன் மூலம் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாகும்.

பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு 98 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சமூக நல

இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றது.

இவற்றில் 80 மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ / மாணவியர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் மற்றும் இதர பள்ளிக் குழந்தைகளுக்கும் 4 இணை சீருடைகள் தைத்து வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதர 18 சங்கங்கள், அலுவலகத்திற்கு தேவையான பதிவேடுகள், ஆவணங்கள், சாக்குகட்டிகள் மற்றும் கயிறு தயாரித்தல் போன்ற பணிகளோடு சீருடைகள் தயாரிக்கும் பணிகளையும் கூடுதலாக செய்து வருகின்றன.

25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அதில் பதிவான உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண். | கூட்டுறவு சங்கங்களின் வகைகள் | கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 80 | 73,047 |
| 2. | மகளிர் எழுதுபொருள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 15 | 1,017 |
| 3. | இணை உணவு தயாரிக்கும் பெண்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1,450 |
| 4. | இதர தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 3 | 1,743 |
| | **மொத்தம்** | **123** | **77,257** |

தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக ஆவதற்கு சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற பிரிவினர், 18 வயதிற்கு மேற்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள், விதவை பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்கள், தையல் தொழில் தெரிந்தவர்கள் தகுதி உடையவர்களாவர். தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக இருக்கும் பெண்களுக்கு ஆண்டு முழுவதற்கும் நிலையான வருவாயை ஈட்டித்தரும் வகையில் வேலை வாய்ப்பினை அளிக்க இத்திட்டம் உறுதுணையாக

உள்ளது. தமிழக அரசு 2012–13 ஆம் ஆண்டு முதல் 4 இணை சீருடைகள் வழங்க ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து, 2016–17ஆம் கல்வியாண்டில் 43.00 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட 4 இணை சீருடைகள் இம்மகளிர் தையல் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலமாக தைத்து வழங்கப்பட்டுள்ளது. சீருடை தைப்பதற்கான தையல் கூலி 2011–12ஆம் ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சீருடைகள் தைப்பதற்கென ₹90 கோடி பள்ளிக் கல்வித் துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் பெண் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் சீருடை தைத்தல் மற்றும் வழங்குதல் பணியானது அவர்களுக்கு நிலையான கணிசமான வருவாயை ஈட்டித் தர வழிவகுத்துள்ளது.

10% அரசு மானியத்துடன் 15,500 நவீன ரக தையல் இயந்திரங்கள் மகளிர் தையல் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. மேற்படி நவீன ரக தையல் இயந்திரங்கள் மூலம் சங்க உறுப்பினர்களின் தைக்கும் திறன் மற்றும் உற்பத்தி திறன் அதிகரித்து வருகிறது.

இந்த சங்கங்கள் மகளிரின் சமூக நிலையை மேம்படுத்தும் மற்றும் நலிவுற்ற நிலையில் உள்ள மகளிரின்

பொருளாதார நிலையை உயர்த்தும் சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சேலம் மற்றும் திருவண்ணாமலையில் பழங்குடியின பெண்களுக்கென செயல்படும் தையல் பயிற்சி மையத்தின் மூலம் ஆண்டுதோறும் 35 பழங்குடியினப் பெண்கள் தையல் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 3.6 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், ஆண் / பெண் மாற்றுத் திறனாளிகள், சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவிடும் வகையில் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் மூலம், சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் மோட்டார் பொருத்தப்பட்ட கூடுதல் வசதிகள் பொருந்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஏழை மக்கள் பயன் பெறுவதற்கு ஏதுவாக ஆண்டு வருமான உச்ச வரம்பு **₹24,000**லிருந்து **₹ 72,000**ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**2017–18ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹135.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.7 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும் பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்ட ரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் **1993**–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மனுதாரர்களுக்கு உடனடியாக தீர்வு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பெண்களுக்கான குறிப்பிட்ட இடர்பாடுகளை விசாரணை செய்திடும் வகையிலும் இவ்வாணையரகத்திற்கு தலைவி மற்றும் **9** உறுப்பினர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய மாற்றங்கள் மேற்கொள்ளுமாறு அரசுக்கு பரிந்துரை செய்திடும்.

பணிபுரியும் இடம் மற்றும் குடும்பத்தில் எதிர்கொள்ளும் அனைத்து வன்கொடுமைகளிலிருந்து பெண்களைப் பாதுகாத்திடவும், பாலின சமத்துவத்தை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் இவ்வாணையமானது வரதட்சணை தடுப்புச் சட்டம், **1961**, குடும்ப வன்முறையிலிருந்து

பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் சீர்படுத்தும்) சட்டம், 2013, ஆகியவை செயல்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.

### 3.7.1 மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்

1. இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சட்ட பிரிவுகள், பாதுகாப்புகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்கள் குறித்தான விவரங்களைக் கவனித்தல்.

2. பெண்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு நிறுவனங்கள் மூலம் முறையாக செயல்படுத்தப்படாத போது அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்.

3. பெண்களுக்கு நீதி கிடைக்க தவறும் பட்சத்தில் தேவையான நீதியைப் பெறுவதற்கு உரிய சட்டத்திருத்தம் மேற்கொள்ள அரசுக்கு பரிந்துரை செய்தல்.

4. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும் நிகழ்வுகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ளவாறு பாதுகாப்பிற்கான உத்திரவாதம் வழங்கப்படாத நிலையிலும்,

பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மகளிர் ஆணையத்தை நேரிடையாக அணுகலாம். தேசிய மகளிர் ஆணையம் மூலமாக பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் ஒருங்கிணைத்து நடத்துகிறது.

### 3.8 தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாட்டில் **1954**–ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூகநல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மகளிர் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக பின்வரும் நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது:-

1. மகளிர் மற்றும் குழந்தைகள் தொடர்பான தன்னார்வ முயற்சிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்.
2. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் சேவைகளின் தரத்தையும் மதிப்பையும் உயர்த்துதல்.
3. மாநில மற்றும் மத்திய சமூகநல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதைக் கண்காணித்தல்.

தமிழ்நாடு சமூகநல வாரியம் ஒரு தலைவரையும் **30** அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. கல்வி மற்றும் பயிற்சி மூலமாக பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், கூட்டு முயற்சி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும்

வாழ்வாதாரத்திற்கு வருவாய் பெருக்கும் நடவடிக்கைகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை தனது சேவைகளின் மூலம் தமிழ்நாடு சமூக நல வாரியம் ஊக்கப்படுத்தி உதவி செய்கிறது.

### 3.8.1 தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியம்

மகளிர் மற்றும் குழந்தைகள் முன்னேற்ற பணியில் ஈடுபட்டுள்ள, சங்கங்கள் பதிவுச் சட்டம் அல்லது பொது அறக்கட்டளை சட்டத்தின் கீழ் பதிவு செய்து, குறைந்தபட்சம் 3 வருடங்கள் சிறப்பாக செயல்படும் 200 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு மானியம் வழங்குவதற்கு தமிழ்நாடு சமூக நல வாரியத்திற்கு ₹10.00 இலட்சம் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொண்டு நிறுவனத்திற்கும் மாநில அரசின் 50% பங்காக ₹5,000 மானியமாக வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்திற்கென 2017–18ஆம் நிதியாண்டிற்கு ₹10.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 3.9 குடும்ப ஆலோசனை மையம் (மாநில அரசின் நிதி உதவி)

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும் குடும்ப ஆலோசனை மையம் என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. இம்மையம் வரதட்சணை கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்ப பிரச்சனைகள் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தகுந்த ஆலோசனையும் வழங்கி வருகின்றது. தற்போது **6** குடும்ப ஆலோசனை மையங்கள், சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. **2017–2018** ஆம் ஆண்டிற்கு **₹4.80** இலட்சம் மாநில அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவி மூலம் நடத்தப்படும் **3** குடும்ப ஆலோசனை மையங்கள் அனைத்து மகளிர் காவல் நிலையங்களைப் பயன்படுத்தி, அதன் மூலம் குடிப்பழக்கம், போதை பழக்கம், வரதட்சணைக் கொடுமை மற்றும் இதர குடும்ப பிரச்சனைகளுக்கு முறையான ஆலோசனை மூலம் சுமூகமாக தீர்க்கப்படுவதோடு,

பாதிக்கப்பட்ட பெண்கள் குடும்பத்தில் உரிய மதிப்போடு வாழ்வதற்கு ஏதுவாக ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. இதற்காக குடும்ப ஆலோசகர்களுக்கு கூடுதல் மதிப்பூதியமாக ஆலோசகர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ₹3,500/– வீதம் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

**மத்திய அரசு நிதியுதவி மூலம் நடைபெறும் திட்டங்கள்**

**குடும்ப ஆலோசனை மையம் (மத்திய சமூக நல வாரியம் மூலம் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்)**

தமிழ்நாட்டில் குடும்ப ஆலோசனை மையம் 1984 முதல் மத்திய அரசால் மத்திய சமூக நல வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 62 மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2016–17ல் ₹198.40 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டு 59,520 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளார்கள்.

62 மையங்களில் 2 மையங்கள் சென்னை (புழல்) மற்றும் வேலூரில் உள்ள மத்திய பெண்கள் சிறைச்சாலையில் செயல்பட்டு வருகிறது, 3 மையங்கள் முறையே காவல் துறை ஆணையரகம், ஆயிரம் விளக்கு மற்றும் பூக்கடையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் மூலம் 2016–17ம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதியுதவி விவரம்

| | தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை | மொத்த அலகுகள் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு (இலட்சம்) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாநில அரசு | 207 | 209 | 17.32 | 8,840 |
| மத்திய அரசு | 267 | 954 | 1,434.55 | 82,170 |

### இராஜீவ் காந்தி தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம் (தமிழ்நாடு சமூக நல வாரியம் மற்றும் இந்திய குழந்தைகள் நலச் சங்கம் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய அரசு திட்டம்)

பணிக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களுக்கு உதவும் வகையில் அவர்களின் குழந்தைகள் பயனடையும் வகையில் குழந்தைகள் காப்பகம் தொடங்கப்பட்டது. 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர்கள் வெளியிலிருக்கும் போது காலை முதல் மாலை வரை பயிற்சி பெற்ற 2 பணியாளர்களால் கவனிப்பும் பராமரிப்பும் வழங்கப்படுகிறது.

குழந்தைகளுக்கு மூன்று வேளை உணவு, பொழுதுபோக்கு மற்றும் கல்வி வசதிகள் அவர்களின் உடல் மற்றும் அறிவு வளர்ச்சிக்காக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2016–2017 ஆம் ஆண்டில் 892 குழந்தைகள் காப்பகங்களிலுள்ள 22,650 குழந்தைகள் பயனடையும் வகையில் மத்திய அரசு ₹1,236.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 3.10 தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம்

மூன்றாம் பாலினரின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களை சமூக வாழ்வின் அனைத்து நிலைகளிலும் ஒன்றிணைப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மூன்றாம் பாலினரின் பிரச்சனைகளைப் பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் தீர்வு செய்வதற்காக அரசு, மூன்றாம் பாலினருக்கான நல வாரியத்தை அமைத்துள்ளது. தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நலவாரியம் மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் அவர்களைத் தலைவராகக் கொண்டு, அவர் உட்பட 11 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 9 அலுவல் சாரா உறுப்பினர்களைக் (மூன்றாம் பாலினர்) கொண்டது.

மூன்றாம் பாலினர் தங்களது வாழ்வாதாரத்திற்காக ஒழுக்கமும் மதிப்புமிக்க வகையில் தொழில் ஒன்றை அமைத்துக்

கொள்வதே அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களில் முதன்மையானதாகும். மூன்றாம் பாலினர் தங்களது வாழ்வாதாரத்தை, பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ளும் பொருட்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள அவர்களின் சுய உதவிக்குழுக்களுக்கு 25 சதவிகித மானியத்துடன் ₹15.00 இலட்சம் வரை வங்கிக் கடன் அளிக்கப்படுகிறது. மளிகை கடை அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், சோப்பு உற்பத்தி செய்தல், அணை ஆடை உற்பத்தி செய்தல், பால் பொருட்களை உற்பத்தி செய்தல், பயணிகள் ஆட்டோ, சரக்கு ஆட்டோ ஓட்டுதல் மற்றும் துணி வியாபாரம், அரிசி வியாபாரம் போன்ற பல்வேறு பொருளாதார செயல்பாடுகளை மூன்றாம் பாலினர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செய்து வருகின்றனர். பல்வேறு திட்டங்களுக்காக, 442 உறுப்பினர்களைக் கொண்ட 51 சுய உதவிக் குழுக்களுக்கு ₹2.20 கோடி மொத்த உதவித் தொகையில் 25 சதவிகித மானியமாக ₹55.00 இலட்சமும், வங்கிக் கடனாக ₹1.65 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு, 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினர்களுக்கு உதவிடும் வகையில், மாதாந்திர ஒய்வூதியம் ₹1000 வழங்கும்

திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 1,000 மூன்றாம் பாலினர் மாதந்திர ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ் மற்றும் பிற முக்கிய ஆளறி அட்டைகளான குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் மற்றும் வீட்டு வசதிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் மூன்றாம் பாலினருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**மூன்றாம் பாலினரின் நலத் திட்டத்திற்காக 2017–2018 ஆம் நிதியாண்டில் ₹220.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.11 பெண்களுக்கான நலச் சட்டங்கள்

மகளிரின் பாதுகாப்பிற்காக கீழ்க்காணும் சமூக நலச் சட்டங்கள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையை முகமையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

1. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
2. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 மற்றும் அதன் விதிகள், 2006
3. பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் சீர்படுத்தும்) சட்டம், 2013
4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015

### 3.12.1 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

இச்சட்டம் சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பத்தில் பெண்கள் வசிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சிறப்பு அம்சங்களை உள்ளடக்கிய சட்டமாகும். இச்சட்டம் பெண்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது. மேலும் இச்சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளித்த **60** நாட்களுக்குள் தீர்வுபெற முடியும். இச்சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தனது கணவர் மற்றும் கணவரைச் சார்ந்த உறவினர்கள் மீதும் வழக்கு தொடருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் குடும்பத்திற்குள் ஏற்படும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குகிறது.

**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- ❖ பிரிவு **17**ன் கீழ் பெண்கள் தனது புகுந்த வீட்டில் வசிப்பதற்கான உரிமையை உறுதி செய்தல்.
- ❖ எதிர் மனுதாரர் குடும்ப வன்முறை புரிவதிலிருந்து தடுத்திடும் பாதுகாப்பு ஆணை.
- ❖ பராமாரிப்புச் செலவினத்திற்கான நிதியுதவி வழங்குதல்.
- ❖ வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளை கண்டறிதல்.
- ❖ பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது குழந்தைகளைத் தற்காலிகமாக தன்னுடன் வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு வழங்குதல்.

- ❖ உணர்வுப் பூர்வமான துன்பங்கள் மன உளைச்சல் மற்றும் காயங்களுக்கு இழப்பீடு வழங்குவதை உறுதி செய்தல்.
- ❖ வழக்கு பதிவு செய்த **60** நாட்களுக்குள் இடைக்கால ஆணை மற்றும் நீதிமன்ற தீர்ப்பினை பெற்று வழங்குதல்.
- ❖ ஒரே வழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.
- ❖ பாதிக்கப்பட்ட நபர்களுக்கிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருந்த போதிலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், **2005**ன் கீழ் வழக்குகளை பதிவு செய்யலாம்.
- ❖ குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து **30** நாட்களுக்குள் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் மேல் முறையீடு செய்யலாம்.

### 3.12.2 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005ன் கீழ் கிடைக்கும் நிவாரணங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| பிரிவு **18** | – | பாதுகாப்பு ஆணை |
| பிரிவு **19** | – | கணவர் வீட்டில் தங்குவதற்கான வசிப்பிட ஆணை |
| பிரிவு **20** | – | பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர் தம் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பொருள் உதவி ஆணை |
| பிரிவு **21** | – | குழந்தைகளைத் தற்காலிகமாக வைத்துக் கொள்வது |
| பிரிவு **22** | – | வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீட்டு ஆணை |

### 3.12.3 பாதுகாப்பு அலுவலர்கள்

மனுதாரருடன் உறவு முறையில் உள்ள எதிர் மனுதாரரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறையினை எதிர்த்து வழக்கு பதிவு செய்திட, பாதுகாப்பு அலுவலர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்றத்தை நாடிட பாதுகாப்பு அலுவலர் உதவி புரிவார். இவர் உரிய நீதிமன்றத்தின் மூலம் தேவையான நிவாரணம் பெறுவதற்கு சட்ட உதவியை மனுதாரருக்கு அளிப்பதை உறுதி செய்வார். மேலும் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் ஆணைகளை காவல்துறையின் உதவியோடு செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பார். ஒவ்வாரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பாதுகாப்பு அலுவலர்கள் இருப்பார்கள். பாதிக்கப்பட்ட பெண்கள் இச்சட்டத்தின் கீழ் நேரடியாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலோ அல்லது சேவை அளிக்கும் நிறுவனத்திலோ அல்லது அருகிலுள்ள காவல் துறையிலோ புகார் மனு அளிக்கலாம்.

### 3.12.4 சேவை அளிப்பவர்கள்

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005–ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த நபர்கள் சேவை அளிப்பவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இச்சட்டத்துடன்

தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியும், நிவாரணமும் பெற்றுத்தர உதவி செய்கின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு குடும்ப நிகழ்வு அறிக்கை பதிவு செய்வதில் உதவுதல், தங்களது குழந்தைகளுடன் தங்குவதற்கு பாதுகாப்பான குறுகிய கால உறைவிடம் பெற்றுத் தருதல், ஆலோசனை மற்றும் தேவையெனில் மருத்துவ வசதி வழங்குதல் போன்ற உதவிகளை செய்கின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் சுயமாக வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக தொழிற்பயிற்சி பெறவும் உதவி செய்கின்றனர். ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் என்றும் சென்னை மாவட்டத்திற்கு இரு சேவை அளிப்பவர்கள் என்று மொத்தம் 33 சேவை அளிப்பவர்கள் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**3.12.5 பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் மருத்துவ வசதிகள்**

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005–ஐ செயல்படுத்திட அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் படி தமிழகத்தில் 98 பாதுகாப்பு இல்லங்கள் அறிவிக்கை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிடும் வகையில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், தொழிலாளர் காப்பீட்டு நிறுவன

மருந்தகங்கள் போன்றவற்றை சேர்த்து மொத்தம் 1,849 மருத்துவமனைகள் 'மருத்துவ வசதி மையங்களாக' அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

**3.13 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961**

1961ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டதுடன் தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. வரதட்சணை தடுப்பு விதிகள், 2004ன் படி மாவட்ட சமூக நல அலுவலர்கள், வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் மூலம் இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்த அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வரதட்சணை தொடர்பாக மாவட்ட சமூக நல அலுவலர்களால் நேரடியாக பெறப்படும் புகார் மனுக்கள் மற்றும் காவல் துறையின் மூலம் பெறப்படும் புகார் மனுக்கள் ஆகியவை வரதட்சனை தடுப்பு அலுவலர்களால் விசாரிக்கப்படுகின்றன. புகாரின் உண்மைத் தன்மை மாவட்ட சமூக நல அலுவலர்களால் கண்டறியப்பட்டு, அதன்அடிப்படையில் வரதட்சணை தடுப்புச் சட்டம்,1961ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு காவல்துறைக்கு / நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் நவம்பர் **26–**ஆம் நாள் வரதட்சனை தடுப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றைய தினம், மாவட்ட சமூக நல அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வரதட்சணை தடுப்புச் சட்டம், **1961** பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

## 3.14 தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014

வீட்டை விட்டு வெளியில் தங்கியுள்ள குழந்தைகள், பெண்கள், பணிபுரியும் மகளிர் ஆகியோர்களின் பாதுகாப்பினை அதிகப்படுத்தவும், அவர்களுக்கு எதிரான வன்முறை செயல்களை தடுக்கவும், குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் பெண்கள் தங்கும் இல்லங்கள், விடுதிகள் மற்றும் ஏனைய பிற தங்கும் இடங்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக, தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், **2014** அரசால் இயற்றப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், **2015**, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இது போன்ற இல்லங்கள்

மற்றும் விடுதிகளை பதிவு செய்யும் அதிகாரி மாவட்ட ஆட்சியரே ஆவார். தேவையின்றி குழந்தைகளை இல்லத்தில் வைத்திருப்பதை குறைப்பதும், விடுதிகளில் தங்கி பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் இச்சட்டத்தின் நோக்கமாகும்.

**3.15 மாநில பெண்கள் வள மையம் (SRCW)**

பெண்களின் ஒட்டுமொத்த திறன் மேம்பாட்டினை முதன்மை நோக்கமாக கொண்டு, தேசிய பெண்கள் மேம்பாட்டிற்கான குழுமம் விழிப்புணர்வு உருவாக்கும் நிகழ்ச்சிகள் வழியாக பெண்களை மையமாக கொண்ட பிற திட்டங்களை ஒருங்கிணைத்து மாநில பெண்கள் வள மையத்தினை சமூக நல இயக்ககத்தில் செயல்படுத்தி வருகிறது. மாநில பெண்கள் வள மையம் இந்திய அரசின் கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களை 2012 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது:—

**3.15.1 சகி – (ஒன் ஸ்டாப் சென்டர்) Sakhi - (One Stop Centre)**

தனியார் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒருங்கிணைந்த அவசர மற்றும் அவசரம் அல்லாத உதவிகளான மருத்துவம், சட்டம், மன நல மேம்பாடு மற்றும் கலந்தாய்வு ஆகியவற்றை பெற்றுத் தருவது

இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். அரசால் முன்னோடி திட்டமாக சென்னையில் சகி தொடங்கப்பட்டுள்ளது. இம்மையம் துயருறும் சூழலில் உள்ள பெண்களுக்கு ஆலோசனை, மருத்துவம், சட்ட உதவி மற்றும் குறுகிய கால தங்கும் வசதிகள் ஆகியவற்றை வழங்குகிறது.

### 3.15.2 பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Women Help Line)

உதவி மற்றும் தகவல் தேவைப்படும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24 மணி நேர இலவச கட்டணமில்லா தொலைபேசி சேவை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நெருக்கடி மற்றும் நெருக்கடி அல்லாத நிகழ்வுகளில் உரிய முகமைகளான காவல் துறை / மருத்துவம்/ விரைவு ஊர்தி சேவை/ மாவட்ட சட்ட ஆணைக்குழு / பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் எளிதில் அணுகுவதற்கு வழிவகை செய்கிறது. இவ்வாண்டில் சென்னையில் சகி (ஒன் ஸ்டாப் சென்டர்) பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

### 3.15.3 கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டம் (VCFS)

மாநிலத்தில் அனைத்து துறைகளிலும் மகளிருக்கு முழுமையாக அதிகாரமளிப்பதற்கு பாடுபடுவது இதன் முக்கிய

நோக்கமாகும். இது, மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களை முனைப்புடன் ஒருங்கிணைப்பதன் வாயிலாக பாலின உணர்வு குறித்த திட்டங்கள், சட்டங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு, மகளிருக்கு அதிகாரமளிக்கும் விவகாரங்களில் ஈடுபடும் அரசுக்கும், ஏனைய பொறுப்பாளர்களுக்கும் உதவுகிறது. தமிழ்நாட்டில் கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு கடலூர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 3.15.4 பூர்ண சக்தி கேந்திரா (Poorna Sakthi Kendra)

அடித்தட்டு அளவில் உள்ள பெண்களுக்கு சேவைகளை வழங்குவதும், தரத்தினை ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசில் தேசிய பெண்கள் மேம்பாட்டுக் குழுமத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள சேலம் மாவட்டத்தில் 10 கிராம பஞ்சாயத்துகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் உள்ள கிராம மற்றும் வட்டார அளவில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் ஒருங்கிணைப்பு சேவைகள் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்பட்டு வருகின்றன.

## 3.16 சுவதார் கிரஹ்

'சுவதார் திட்டம்' மற்றும் 'குறுகிய கால தங்கும் இல்லங்கள்' ஆகிய திட்டங்களை ஒன்றிணைத்து 'சுவதார் கிரஹ்' என்ற புதிய திட்டம் மத்திய அரசால் 2016–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்ட 26 குறுகிய கால தங்கும் இல்லங்களும் சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த 12 சுவதார் இல்லங்களும் இணைக்கப்பட்டு சமூக நல இயக்ககத்தின் கீழ் சுவதார் கிரஹ் இல்லங்களாக செயல்பட்டு வருகின்றன. தற்போது மாநிலத்தில் 38 சுவதார் கிரஹ் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் துயருறும் சூழ்நிலையில் உள்ள பெண்களுக்கு தங்குமிடம் மற்றும் பயிற்சி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லமும் 30 பெண்களின் தேவைகைளைப் பூர்த்தி செய்கிறது. இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் மத்திய, மாநில அரசுகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கிடையே 60:30:10 என்ற நிதி பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.17 மாநில விருதுகள்

பெண்களுக்காக உலகம் முழுவதும் மார்ச் 8 ஆம் தேதியை உலக மகளிர் தினமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில், இத்துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து, அவ்வையார் விருது எனும் உயரிய விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு 8 கிராம் (22 காரட்) எடையுள்ள தங்கப்பதக்கம், ₹1.00 இலட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகிறது.

பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய சிறந்த சமூக சேவகி மற்றும் பெண்களுக்காக சிறப்பாக தொண்டாற்றிய சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர தின விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. சிறந்த சேவகிக்கு 10 கிராம் எடையுள்ள 22 காரட் தங்கப்பதக்கம், சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு ₹50,000 ரொக்கப் பரிசுடன் சால்வை மற்றும் தங்கப்பதக்கம் வழங்கப்படுகின்றன.

*******

## அத்தியாயம் – 4

# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்

**4.1** சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு முதன்மை மாநிலமாக திகழ்கிறது. உணவளிப்பதன் மூலம் பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மாணவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதிசெய்திடவும், குழந்தைகளின் ஊட்டச்சத்தினை அதிகரிக்க வேண்டியும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் **1982**ல் தொடங்கப்பட்டது. பசியோடு உள்ள குழந்தையாலும், ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தையாலும் படிப்பின் மீது கவனம் செலுத்த இயலாது என்ற காரணியின் அடிப்படையில், அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிற்சி மையங்கள், மதரசாக்கள் மற்றும் மக்தப்களில் பயிலும் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கும், மற்றும் உயர்துவக்கப்பள்ளிகளில் **10**ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் மூலம் சமைத்து சூடான இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது.

## 4.2 இத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்

1. அனைவருக்கும் ஆரம்ப கல்வியினை உறுதி செய்திடும் பொருட்டு, பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் இடை நிற்றலை குறைத்தல்

2. வறுமையால் வாடும் குழந்தைகளுக்கும் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துதல்

3. ஏழ்மையில் வாடும் பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்கப்படுத்துதல், முறைப்படுத்துதல் மற்றும் முறையான கல்வி வழங்குதல்

4. வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் பெண்களின் நிலையை மேம்படுத்தி முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல்

## 4.3 திட்டத்தின் உட்கூறுகள்

i) 5 முதல் 9 வயதிற்குட்பட்ட துவக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் 10 முதல் 15 வயது வரையிலான உயர் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும், வாரத்திற்கு 5 நாட்கள் வீதம் ஆண்டிற்கு 220 நாட்கள், பள்ளி வளாகத்திற்குள்ளேயே சூடான, சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

ii) தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு,

திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகிய 16 மாவட்டங்களில் உள்ள தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வருடத்தில் 312 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

iii) 1 முதல் 5ஆம் வகுப்பு வரை துவக்கப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு, நாளொன்றுக்கு 100 கிராமும், 6 முதல் 10–ஆம் வகுப்பு வரை உயர் துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு 150 கிராமும் என்ற அளவில் சத்துணவு சமைப்பதற்காக அரிசி பயன்படுத்தப்படுகிறது.

**4.4 தமிழகத்தில் சத்துணவுத் திட்டத்தின் கால முறை வளர்ச்சி**

சத்துணவுத் திட்டமானது, முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1.7.1982 ஆம் ஆண்டு 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5 வயது முதல் 9 வயதிற்குட்பட்ட ஆரம்பப்பள்ளி பயிலும் குழந்தைகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்டது. பின்னர் 15.09.1982–இல் நகர்ப்புற பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டதோடு, 15.09.1984 ஆம் ஆண்டு 10 வயது முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

15.09.1984

10 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது

15.09.1982

நகர்ப்புறப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப் பட்டது.

01.07.1982

2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5 முதல் 9 வயதிற்குட்பட்ட ஆரம்பப்பள்ளி பயிலும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டது

## 4.5 நிர்வாகக் கட்டுப்பாடு

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள பள்ளி சத்துணவு மையங்கள், சென்னை மாவட்டம் மற்றும் 31 மாவட்டங்கள் அனைத்தும் சமூக நல இயக்குநரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை மாவட்டங்களில் செயல்படுத்தும் மாவட்ட அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்தவர்கள். சென்னை மாவட்டத்தை பொருத்தமட்டில் சென்னை மாநகராட்சியின் கூடுதல் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி

அலுவலரின் ஆலோசனைப்பெற்று இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

**2** முதல் **5** வயது வரையிலான குழந்தைகளுக்கான முன்பருவ கல்வி சத்துணவு மையங்கள், இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களது நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றது.

## 4.6 பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகள் விவரம் – 2017–2018

**26,810** சத்துணவு மையங்களில் **(1** முதல் **5**ஆம் வகுப்பு வரை**)** பயிலும் **26,18,063** துவக்கப்பள்ளி பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

**16,064** சத்துணவு மையங்களில் **(6** முதல் **8**ஆம் வகுப்பு வரை**)** பயிலும் **20,63,766** உயர்துவக்கப்பள்ளி பயனாளிகள் மற்றும் **9** முதல் **10**ஆம் வகுப்பு வரை **6,41,770** பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். **269** தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் **7,612** பயனாளிகளும் பயன்பெற்று வருகின்றனர். ஆக மொத்தம் **43,143** பள்ளி சத்துணவு மையங்களில் **53,31,211** பயனாளிகள் **2017–2018** ஆம் ஆண்டில் பயன்பெற்று வருகின்றனர்.

### 4.6.1 பயனாளிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல்

மாவட்ட ஆட்சித் தலைவர்களால், ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும், ஒவ்வொரு மையத்திற்கான பயனாளிகளின் எண்ணிக்கை, பள்ளிக்கு வந்து மதிய உணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனுப்பும் அறிக்கைகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு 3 மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், கல்வி உரிமைச் சட்டம், 2009ன் படி, பள்ளிகளில் பயிலும் அனைத்து குழந்தைகளையும் முழுமையாக இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

## 4.7 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து வழங்குதல்

### 4.7.1 புதிய கலவை சாதம் வழங்கும் திட்டம் அறிமுகம் செய்தல்

2013 ஆம் வருடம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரத்தில் 13 வகையான புதிய வகை கலவை சாதம் மற்றும் 5 வகையான மசாலா முட்டைகள் இத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றிகரமான துவக்கத்தினைத் தொடர்ந்து அனைத்து சமையலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு, படிப்படியாக, விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டு திட்டம் வலுப்பெறச் செய்யப்பட்டது. 15.08.2014

முதல் இத்திட்டம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பல்வகை கலவை சாத உணவு வகைகள் பின்வருமாறு:–

| **நாட்கள்** | **வழங்கப்பட்டு வரும் உணவு வகை** | |
|---|---|---|
| | **முதல் மற்றும் மூன்றாம் வாரம்** | **இரண்டாவது மற்றும் நான்காவது வாரம்** |
| திங்கட் கிழமை | வெஜிடபிள் பிரியாணி + மிளகு முட்டை | சாம்பார் சாதம் (பிஸிபேளாபாத்) + வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை | கருப்பு கொண்டைக்கடலை புலவு + தக்காளி மசாலா முட்டை | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை |
| புதன் கிழமை | தக்காளி சாதம் + மிளகு முட்டை | புளி சாதம் +தக்காளி மசாலா முட்டை |
| வியாழக் கிழமை | சாதம், சாம்பார்+வேகவைத்த முட்டை | எலுமிச்சை சாதம் + சுண்டல் + தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+ மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு | சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |

### 4.7.2 சத்துணவில் முட்டை வழங்குதல்

பதிவுபெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதத்துடன்

குறைந்தபட்சம் **46** கிராம் எடையுள்ள ஒரு முட்டை அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு **46** கிராம் எடையுள்ள முட்டையில் **6.12** கிராம் புரதமும், **80** கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது. முட்டைக்கான செலவினம் முழுவதும் மாநில அரசே ஏற்கிறது.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், **1998** மற்றும் விதிகள், **2000**–ஐ பின்பற்றி மாநில அளவில் அக்மார்க் ‘A’ குறியீட்டான நடுத்தர முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகிறது. குறைந்த பட்சம் **46** கிராம் முதல் அதிகபட்சமாக **52** கிராம் வரை எடையுள்ள முட்டைகள் அனைத்து சத்துணவு மையங்களுக்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது. கண்காணிப்பை மேம்படுத்தும் பொருட்டு, உணவு தரம் வாய்ந்த வண்ணங்களைக் கொண்டு முட்டைகளின் மேல் முத்திரை பதிக்கும் வழக்கம் நடைமுறையில் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் **1989** ஆம் ஆண்டு முதல் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு முட்டை வழங்கப்பட்டது. பின்னர் **1998** ஆம் ஆண்டு வாரம் ஒரு முறை முட்டை என விரிவுபடுத்தப்பட்டு, **2005, 2007, 2010** ஆம் ஆண்டுகளில் ஒரு வாரத்திற்கு முறையே **2, 3** மற்றும் **5** முட்டைகள் என வழங்கப்பட்டு வருகிறது.

### 4.7.3 சத்துணவில் பயறு வகைகள் அறிமுகம் – கொண்டைக் கடலை / பாசிப் பயறு

ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது வாரங்களில் வரும் செவ்வாய் கிழமைகளில் 20 கிராம் கருப்பு ‘கொண்டைக் கடலை, புலவுடன் சேர்த்து கொண்டைக் கடலை புலவாக வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 72 கிலோ கலோரி சக்தியும் 3.42 கிராம் புரதமும் கிடைக்கிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது வாரங்களில் வரும், வியாழக் கிழமைகளில் 20 கிராம் பச்சைப் பயறு வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 67 கிலோ கலோரி சக்தியும் 4.80 கிராம் புரதமும் கிடைக்கிறது.

### 4.7.4 சத்துணவில் உருளைக் கிழங்கு அறிமுகம்

ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் குழந்தைகளுக்கு மாவு சத்தின் (கார்போஹைட்ரேட்) அளவினை அதிகரிக்கும் வகையில், 20 கிராம் உருளைக் கிழங்கு, மிளகாய்பொடி தூவி வறுத்து வழங்கப்படுவதால் 19.04 கிலோ கலோரி சக்தியும், 0.32 கிராம் புரதமும் கிடைக்கிறது. 2015ஆம் ஆண்டு முதல் 20 கிராம் உருளைக்கிழங்கிற்கான கொள்முதல் தொகை 16 பைசாவிலிருந்து 40 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 4.7.5 சத்துணவில் வாழைப்பழம் அறிமுகம்

முட்டை உண்ண விருப்பமில்லாத குழந்தைகளுக்கு, மாற்றாக 100 கிராம் எடையுள்ள வாழைப்பழம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1.2 கிராம் புரதமும், 116 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது. சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூர் சந்தைகளில் வாழைப்பழம் கொள்முதல் செய்யப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

### 4.7.6 சத்துணவில் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் சமையல் எண்ணெய் அறிமுகம்

சுகாதார மேம்பாட்டின் ஒரு பகுதியாக, அயோடின் மற்றும் இரும்புச்சத்து குறைபாட்டினைக் களையும் பொருட்டு இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு, சத்துணவில் பயன்படுத்தப்படுவதால் அயோடின் மற்றும் இரும்பு குறைபாடு நோய்கள் நீக்கப்பட்டு தடுக்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம், வைட்டமின் A மற்றும் வைட்டமின் D சத்துக்களுடன் செறிவூட்டப்பட்ட பனை எண்ணெய் (Palmolein) அனைத்து சத்துணவு மையங்களுக்கும் வழங்கப்படுகிறது.

## 4.8 தேசிய மதிய உணவுத் திட்டம்

- 1995ம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாளன்று மத்திய அரசால் ஆரம்பக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம் தொடங்கப்பட்டது. 1997–1998ஆம்

ஆண்டு, நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது. அக்டோபர் 2007 ஆம் ஆண்டு, 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, ஆரம்பக்கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம் என்ற பெயர், பள்ளிகளில் "**தேசிய மதிய உணவுத் திட்டம்**" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

- இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு நிதியுதவி வழங்குகிறது. நிதி பங்களிப்பு விகிதாசாரம் ஒட்டுமொத்த நிதியில் 60 சதவிகிதம் மைய அரசின் பங்காகவும் 40 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் வழங்கப்பட வேண்டும் என 2015–2016 ஆம் ஆண்டு முதல் மைய அரசால் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி உணவூட்டுச் செலவினம் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் மைய மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரிசி, அதற்கான போக்குவரத்து செலவினம் மற்றும் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இனங்களுக்காக வழங்கப்படும் நிதி 100% மைய அரசால் வழங்கப்படுகிறது.

- குழந்தைகள் உட்கொள்ளும் மதிய உணவின் ஊட்டச்சத்து அளவினை, துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 450 கலோரியுடன் 12 கிராம் புரதச்சத்து கொண்டதாக இருக்க வேண்டும் எனவும், உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 700 கலோரியுடன் 20 கிராம் புரதச்சத்து கொண்டதாக இருத்தல் வேண்டும் என மைய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்ட

மாநில அரசால் கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டு துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு **553.30** கலோரிகளும், **18.12** கிராம் புரதமும், உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு **733.86** கலோரிகளும், **21.64** கிராம் புரதமும் கொண்ட மதிய உணவு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

- **1** முதல் **8** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஒரு மெட்ரிக்டன் அரிசி **₹3,000** வீதம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு மெட்ரிக் டன் அரிசிக்கான போக்குவரத்து செலவினமாக **₹750**ம் வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்தின் கீழ் **1** முதல் **5**ஆம் வகுப்பு வரை பயிலும் ஒவ்வொரு பயனாளிக்கும் ஆகும் தினசரி உணவூட்டுச் செலவினம் **₹4.13** எனவும், **6**ஆம் வகுப்பு முதல் **8**ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு, **₹6.18** எனவும் மைய அரசு நிர்ணயித்துள்ளது (பணியாளர் ஊதியம் மற்றும் நிர்வாக செலவினம் நீங்கலாக). இருப்பினும் மாநில அரசு தனது பங்கீட்டான **40** சதவிகிதத்தை விட கூடுதலாக செலவினம் மேற்கொள்கிறது.

(₹இல்)

| வகுப்பு | மதிய உணவு விதிகள் (60:40) | மத்திய அரசு (60%) | மாநில அரசு (40%) | மாநில அரசின் கூடுதல் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) | 4.13 | 2.48 | 1.65 | 2.81 | 6.94 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) | 6.18 | 3.71 | 2.47 | 0.86 | 7.04 |
| 9 மற்றும் 10ம் வகுப்பு | 100 விழுக்காடு மாநில அரசின் பங்களிப்பு | | | | 8.61 |

## 4.9 உணவு பொருட்கள் மேலாண்மை

- சத்துணவுத் திட்டத்திற்கு தேவையான உணவுப்பொருட்களை (பருப்பு, எண்ணெய், கருப்பு கொண்டைக்கடலை மற்றும் பச்சைப்பயறு போன்றவற்றை) விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்படுகிறது.
- நயமிக்க சராசரி நல்ல தரமான (Fair Average Quality)அரிசியை வழங்க வேண்டியது இந்திய உணவுக் கழகத்தின் பொறுப்பாகும்.
- மைய அரசால் ஒதுக்கப்பட்ட அரிசி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் இந்திய உணவு கழகத்திடமிருந்து எடுக்கப்பட்டு, பின்னர் மாவட்ட அலுவலரின் தேவைப்பட்டியலின் அடிப்படையில் சத்துணவு மையங்களுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது.
- இத்திட்டம் மாநில அரசால் 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுப்படுத்தப் பட்டுள்ளது. இதற்காகும் முழு செலவினமும் மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு பயன்படுத்தப்படும் அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் ஒரு மெட்ரிக்டன் ₹10,438 என்ற விலையில் மையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பினை தமிழ்நாடு உப்புக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்து சத்துணவு மையங்களுக்கு விநியோகம் செய்கிறது.
- இவ்வாறு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் உள்ள தொடரமைப்பின் காரணமாக சத்துணவு மையங்களுக்கு தங்குதடையின்றி நிலையான உணவுப் பொருட்கள் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.
- சத்துணவு அமைப்பாளர்களது வங்கி கணக்கில் மின்னணு பரிமாற்றம் (ECS) மூலமாக வரவு வைக்கப்படும் முன்பணத் தொகையினை பயன்படுத்தி சத்துணவு தயாரிப்பதற்கு தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்களை உள்ளூரிலேயே வாங்கி செலவினம் மேற்கொள்ள சத்துணவு அமைப்பாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு முதல் சத்துணவு அமைப்பாளர்களுக்கு இச்செலவினம் மேற்கொள்வதற்காக துவக்கப்பள்ளி மாணவர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ₹1.17ம், உயர்துவக்கப்பள்ளி மாணவர் ஒருவருக்கு ₹1.27ம் வழங்கப்படுகிறது.

## 4.10 உட்கட்டமைப்பு வசதிகள்

### 4.10.1 வைப்பறையுடன் கூடிய சமையலறை

2006–2007ஆம் ஆண்டு முதல் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கு மையம் ஒன்றுக்கு ₹60,000 என நிர்ணயம் செய்து, 100 சதவிகித பங்கினை மைய அரசே வழங்கி வந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கு மாநில அரசால் நிர்ணயம்

செய்யப்படும் பரப்பளவு மற்றும் கட்டுமான செலவினத்தினை அடிப்படையாகக் கொண்டு பகிர்வு அடிப்படையில் நிதி நிர்ணயம் செய்யப்பட்டது. 100 குழந்தைகள் வரை உள்ள பள்ளிகளில் 20 சதுர மீட்டரும், ஒவ்வொரு 100 கூடுதல் குழந்தைகளுக்கு, கூடுதலாக 4 சதுர மீட்டர் பரப்பளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட செலவினத்திற்கு ஆகும் தொகையில் 60 சதவிகிதம் மத்திய அரசும் 40 சதவிகிதம் மாநில அரசும் மேற்கொள்கின்றன.

2006–2007 முதல் 2012–2013 வரை 28,856 சமையல் கூடங்கள் கட்டுவதற்கு ₹59,035.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2017 வரை 20,496 கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி கட்டடங்களை முடிப்பதற்கு உண்டான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.10.2 சத்துணவு மையங்களை நவீனமயமாக்குதல்

புகையில்லா சுற்றுச்சூழல் மற்றும் வசதிகளை ஏற்படுத்த, சத்துணவு மையங்களில் எரிவாயு இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மையம் ஒன்றுக்கு எரிவாயு இணைப்பிற்காக ₹22,350 வீதம் சிறப்பினமாக மாநில அரசின் நிதியிலிருந்து முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை சமையல் மேடை கட்டுமானத்திற்கும், எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு பெறுவதற்கும் (பாதுகாப்பு நடவடிக்கைகள்

போன்றவை உள்ளடங்கியவை) வழங்கப்பட்டுள்ளது. **34,721** மையங்களுக்கு எரிவாயு இணைப்பு கொடுத்து முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள **8,422** மையங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. எரிவாயு அடுப்புகளை கையாளுவது குறித்த பயிற்சிகள் அந்தந்த எரிவாயு முகவர்கள் மூலம் சத்துணவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 4.10.3 சமையல் உபகரணங்கள்

அனைத்து சத்துணவு மையங்களுக்கும் சமையல் இலகுவாக செய்திட போதுமான சமையல் உபகரணங்களான மூடியுடன் கூடிய சமையல் பாத்திரம், கரண்டி மற்றும் இன்டோலியம் கடாய் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. ஒரு சத்துணவு மையத்திற்கு சமையல் உபகரணங்கள் வாங்குவதற்கு மத்திய அரசால் **₹5,000** ஒரு முறை நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசின் நிதியிலிருந்து எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் சத்துணவுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாநில அரசின் சிறப்பு நிதியிலிருந்து அனைத்து சத்துணவு மையங்களுக்கும் கலவை இயந்திரம் (Mixie) வழங்கப்பட்டுள்ளன.

### 4.10.4 சில்லரை செலவினம்

சத்துணவு மையங்களைச் சுத்தம் செய்ய தேவையான சோப்பு, துடைப்பம், பினாயில் போன்ற பொருட்கள் வாங்குவதற்கென மையம் ஒன்றுக்கு ₹50 வீதம் சில்லரை செலவினமாக வழங்கப்பட்டு வருகின்றன.

## 4.11 வெளிப்படைத் தன்மை மற்றும் கணக்கு காட்டும் பொறுப்புடைமை

அனைத்து சத்துணவு மையங்களிலும் வெளிப்படைத் தன்மை மற்றும் கணக்கு காட்டும் பொறுப்புடைமை ஆகியவற்றை உறுதி செய்யும் பொருட்டு ஒவ்வொரு மையத்திலும் பொதுமக்கள் பார்வைக்காக தகவல் பலகை வைக்கப்பட்டுள்ளது. அத்தகவல் பலகையில் பின்வரும் தகவல்கள் அளிக்கப்படுகின்றன:

i. பள்ளி குழந்தைகளின் வருகை.
ii. சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எண்ணிக்கை.
iii. தினசரி வழங்கப்படும் உணவுப் பட்டியல்.
iv. துவக்கப்பள்ளி மற்றும் உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு

## 4.12 கண்காணிப்பு அமைப்பு

- சமுதாய பங்கேற்பினை ஊக்கப்படுத்த வேண்டி, சிறப்பு நேர்வாக 2013 ஆம் ஆண்டு முதல் சத்துணவுத் திட்டத்தில் சமுதாயத் தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும்

இரண்டு முறை, அதாவது, ஜனவரி 26 மற்றும் ஆகஸ்டு 15ஆம் நாளன்று கிராம சபையில் இத்திட்டம் குறித்த சமுதாயத் தணிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் மாணவர்கள், ஆசிரியர்கள், தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த உத்வேகத்துடன் கலந்து கொண்டு திட்ட செயலாக்கம் பற்றி விரிவாக கலந்துரையாடப்படுகிறது.

- சத்துணவு மையங்களை திடீர் ஆய்வு மேற்கொள்ள, ஒவ்வொரு அலுவலர்களுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் போது சமைத்து வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அளவு, உண்ணும் மாணவர்களது எண்ணிக்கை, கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்கள், பதிவேடுகள் பராமரிப்பது போன்றவற்றையும் கண்காணிப்பு செய்திட வேண்டும்.
- தலைமைச் செயலர் அவர்களின் தலைமையிலான, மாநில அளவிலான வழிப்படுத்தும் மற்றும் கண்காணிப்பு குழு ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து தனித்தனியே கண்காணிக்கப்படுகிறது.
- குழந்தைகளுக்கு மதிய உணவு பரிமாறுவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களால் உணவினை சுவைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்கள் ''சுவை பதிவேடு'' ஒன்றையும் இது தொடர்பாக பராமரித்து வருகின்றனர்.
- மேலாண்மைத் தகவல் தொகுப்பு அடிப்படையில் தேசிய மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மதிய உணவு உண்ணும் பயனாளிகளின் விவரம், சத்துணவு மையங்களின் விவரம், வைப்பறையுடன் கூடிய சமையலறை, நவீன மயமாக்கப்பட்ட சத்துணவு

மையங்கள், தண்ணீர் வசதி, தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் பொருட்கள், பட்டியல்கள் தயாரித்தல் மற்றும் நிவர்த்தி செய்தல், சமையல் உதவியாளர்களின் விவரம் போன்றவை அரசின் இணைய தளம் மூலம் வட்டாரம் மற்றும் மாவட்டம் வாரியாக மாதந்தோறும் பதிவேற்றப்படுகிறது.

## 4.13 குறை தீர்க்கும் முறை

- குறைகள் ஏதேனும் இருப்பின், அதனை சீராக்கும் பொருட்டு, 29 மாவட்டங்களில் கட்டணமில்லா இலவச தொலைபேசி செயல்பாட்டில் உள்ளது.
- திட்டத்தில் ஏதேனும் முன்னேற்றம் தேவைப்படின் அதன் பொருட்டு பள்ளிகளில், புகார் / ஆலோசனை பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.
- குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை சரிசெய்யும் பொருட்டு மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (ச.உ.தி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குறை தீர்க்கும் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## 4.14 பயிற்சித் திட்டம்

பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில், ஊட்டச்சத்து, சுகாதாரம், நகம் வெட்டுதல், சமைப்பதற்கு மற்றும் பரிமாறுவதற்கு முன், சோப்பால் கை கால் சுத்தம் செய்தல் போன்ற தன் சுத்தம் பேணுதல் தொடர்பாகவும், சமைக்கும் மற்றும் பரிமாறும் பாத்திரங்களை சுத்தம் செய்வது, உணவுப் பொருட்களைச் சேமிப்பது, சுற்றுப்புறத்தைப் பாதுகாப்பாக

வைத்திருப்பது, கழிவுகளை அகற்றுதல் போன்றவற்றில் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து சத்துணவுப் பணியாளர்களுக்கும் சமையற்கலை வல்லுநர்களால் புதிய பலவகை கலவை சாதங்கள் தயாரிப்பது தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**4.15 பள்ளி சுகாதார திட்டத்துடன் இணைந்து செயல்படுதல்**

குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை நோக்கமாக கொண்டு, அனைத்து பள்ளிகளிலும் சுகாதாரத் துறையின் மூலம், மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. பள்ளி சுகாதார திட்டத்தின் உட்கூறுகள் பின்வருமாறு:–

i. இரத்தசோகை, பொது சுகாதாரம் மற்றும் இதர சுகாதார பிரச்சனைகளை பரிசோதித்தல் – சுகாதார பராமரிப்பு மற்றும் தொடர் சிகிச்சைக்கான பரிந்துரைக் குறிப்பு
ii. நோய் எதிர்ப்பு, கண் மற்றும் குறிப்பாக பல் பரிசோதனை
iii. நுண் ஊட்டச்சத்துக்களான இரும்பு சத்துடன் கூடிய போலிக் அமிலம் (IFA) மாத்திரைகள் மற்றும் வைட்டமின் ஏ மருந்து வழங்குதல்
iv. குடற்புழு நீக்கம் செய்யும் மருந்துகள்
v. அனைத்து குழந்தைகளுக்கும் தனிப்பட்ட சுகாதார அட்டைகள் பராமரித்து அவர்களின் சுகாதார நிலையினை கண்காணித்தல்.

### 4.16 சத்துணவுப் பணியாளர்கள்

### 4.16.1 ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை உள்ள 53.31 இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தில் பயனடைவதற்காக 43,143 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் என மூன்று பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள பள்ளி சத்துணவு மையத்தில் ஒரு சமையல் உதவியாளர் கூடுதலாக நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு வகுத்துள்ள வழிமுறையின்படி 25 பயனாளிகளுக்கு ஒரு சமையல் உதவியாளர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்கீடு (60:40) பகிர்வின் அடிப்படையில் மதிப்பூதியமாக ₹1,000 வழங்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசு, குழந்தைகளுக்கு சுவையான, சத்தான, பாதுகாப்பான உணவுகளை வழங்கும் பொருட்டு மையம் ஒன்றுக்கு சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் என மூன்று பணியாளர்கள் நியமனம் செய்துள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு :-

**ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள சத்துணவுப்  பணியாளர்கள்**

| வ.எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1 | அமைப்பாளர் | 42,423 |
| 2 | சமையலர் | 42,852 |
| 3 | சமையல் உதவியாளர் | 42,855 |
| | மொத்தம் | 1,28,130 |

சத்துணவுப் பணியாளர்களின் பணி நேரம் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை ஆகும்.

**4.16.2 ஊதிய விகிதம்**

சத்துணவுப் பணியாளர்கள் “பகுதி நேர நிரந்தரப் பணியாளர்கள்’’ என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு கால முறை ஊதியம்  பின் வருமாறு :–

| வ. எண். | பதவி | காலமுறை உதியம் | பெற்று வரும் குறைந்த பட்சம் – அதிக பட்சம் ஊதியம் |
|---|---|---|---|
| 1. | சத்துணவு அமைப்பாளர் | ₹2,500–5,000 + தர ஊதியம்  ₹500 | ₹7,530 –₹10,478 |
| 2. | சமையலர் | ₹1,300–3,000 + தர ஊதியம்  ₹300 | ₹4,380 – ₹5,055 |
| 3. | சமையல் உதவியாளர் | ₹950 – 2,000 + தர ஊதியம்  ₹200 | ₹3,368 – ₹4,380 |

**4.16.3 சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம்**

ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சிறப்பு மாதாந்திர ஓய்வூதியமாக **31.1.2016** வரை **₹1,000** ஒரே சீராக வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை **01.02.2016** முதல் அனைத்து பணியாளர்களுக்கும் **₹1,500** ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**2017–2018**ஆம் நிதியாண்டுக்கு இவ்வகை செலவினங்களுக்கு **₹8,534.95 இலட்சம்** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.16.4 ஒட்டு மொத்த தொகை**

ஒட்டு மொத்த தொகையாக ஜனவரி **2016** வரை சத்துணவு அமைப்பாளர்களுக்கு **₹50,000**, சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு **₹20,000** என அவர்கள் ஓய்வு பெறும்பொழுது வழங்கப்பட்டு வந்ததை, பிப்ரவரி **2016** முதல், சத்துணவு அமைப்பாளர்களுக்கு **₹60,000**, சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு **₹25,000** ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**2017–2018** ஆம் நிதியாண்டுக்கு திட்ட மதிப்பீட்டில் இவ்வகை செலவினத்திற்கு **₹2,097.44 இலட்சம்** ஒதுக்கப்பட்டுள்ளது.

**4.16.5 பண்டிகை முன்பணம்**

ஒவ்வொரு வருடமும் சத்துணவுப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணமாக ₹5,000 வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை 10 சம தவணைகளில் அவர்களுடைய மாத சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

2017–2018 ஆம் நிதியாண்டுக்கு இவ்வகை செலவினங்களுக்கு **₹4,774.32 இலட்சம்** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.16.6 பொங்கல் போனஸ்**

சத்துணவுப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும், ஜனவரி மாதத்தில் பொங்கல் போனஸாக ₹1,000 வழங்கப்படுகிறது.

**4.16.7 மலைவாழ் படி மற்றும் குளிர்கால படி**

மலைப் பகுதிகளில் உள்ள சத்துணவுப் பணியாளர்களுக்கு மலைவாழ் படி மற்றும் குளிர்கால படி வழங்கப்படுகிறது. வருடம் முழுவதும் மலைவாழ்படியாக அடிப்படை ஊதியம் + தர ஊதியத்தில் 20 சதவிகிதம் கணக்கிட்டும் மற்றும் குளிர்காலப் படியாக அடிப்படை ஊதியத்தில் 5 சதவிகிதம் கணக்கிட்டும் வருடத்தில் 4 மாதங்கள் மட்டும் வழங்கப்படுகிறது.

### 4.16.8 சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்

மாதம் ஒன்றுக்கு ₹20 வீதம் 148 தவணைகளில் ₹2,960 பிடித்தம் செய்யப்பட்டு சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது மேற்படி தொகை மற்றும் அத்தொகைக்கான வட்டியுடன் அரசின் பங்கீடாக ₹10,000 சேர்த்து சிறப்பு சேம நல நிதியாக வழங்கப்படுகிறது.

### 4.16.9 சத்துணவு அமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் படி

மார்ச் 2015 வரை சத்துணவு அமைப்பாளர்கள் கூடுதலாக சத்துணவு மையங்களை கண்காணிக்க அவர்களுக்கு ₹10 கூடுதல் பொறுப்புப்படியாக வழங்கப்பட்டு வந்ததை, ஏப்ரல் 2015ம் ஆண்டு முதல் ₹20 ஆக நாளொன்றுக்கு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### 4.16.10 குடும்ப நல நிதி

நிரந்தரப் பணியாளர்களைப் போல சத்துணவுப் பணியாளர்களுக்கும் மாதச் சந்தா ₹60 ஆக உயர்த்தி, அதனை அவர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு ஒட்டுமொத்த தொகை ₹3.00 இலட்சமாக உயர்த்தி இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு குடும்ப நல நிதியாக வழங்கப்படுகிறது.

**4.16.11 பணியிடையே காலமான சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உடனடி நிவாரணம்**

பணியிலிருக்கும் போது இறக்கும் சத்துணவுப் பணியாளர்களது ஈமச்சடங்கிற்காக ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த **₹5,000** பிப்ரவரி **2016** முதல் **₹25,000** ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை குடும்ப நல நிதி **₹3.00** இலட்சத்திலிருந்து சரிகட்டப்படும்.

**4.16.12 புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்**

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் **2012**–ன்படி சத்துணவுப் பணியாளர்களுக்கு (சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்) **01.07.2012** முதல் **30.06.2016** வரையிலான **4** ஆண்டு தொகுப்புக் காலத்திற்கு **₹4.00** இலட்சம் வரை நிர்ணயித்து மாத சந்தாவாக **₹150** வீதம் அவர்களுடைய மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. மே **2015** முதல் ஆண்டு வருமானம் **₹72,000**க்கும் குறைவாக உள்ளவர்களுக்கு மாத சந்தாவான **₹150** பிடிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மேலும் ‘‘புதிய சுகாதார காப்பீட்டுத் திட்டம், **2016**’’ என்ற பெயரில் **01–07–2016** முதல் **4** ஆண்டு தொகுப்புக் காலத்திற்கு விரிவுபடுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4.16.13 பொது வருங்கால வைப்பு நிதி**

சத்துணவுப் பணியாளர்களுக்கு 01.08.2015 முதல் பொது வருங்கால வைப்புநிதி சந்தாவாக அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 12 சதவிகிதம் பிடித்தம் செய்யப்படுகிறது. அவர்களுக்கு 9 இலக்கங்களைக் கொண்ட பொது வைப்பு நிதி கணக்கு எண்ணிற்கு பிறகு "சஉதி" என்ற பின் இணைப்புடன் கூடிய வைப்பு நிதி கணக்கு துவங்கப்பட்டு, இப்பொது வைப்பு நிதி கணக்கு அட்டவணைகளை அரசு தகவல் தொகுப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**4.16.14 தற்செயல் விடுப்பு**

சத்துணவுப் பணியாளர் அனைவருக்கும் வருடத்திற்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படுகிறது.

**4.16.15 மகப்பேறு விடுப்பு**

மே 2015 முதல் திருமணமான பெண் சத்துணவுப் பணியாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு 90 நாட்களிலிருந்து 180 நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**4.16.16 விருப்ப ஓய்வு**

சத்துணவுப் பணியாளர்களை, அவர்களுக்கான ஓய்வூதிய பலன்களுடன் மருத்துவ காரணங்களுக்காக தன்

விருப்ப ஓய்வில் செல்ல ஏப்ரல் 2015 முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**4.16.17 கருணை அடிப்படையிலான பணி நியமனம்**

பணியிடையே காலமான சத்துணவு ஊழியரின், தகுதியுள்ள பெண் மற்றும் ஆண் (பெண் வாரிசுதாரர் இல்லாதபட்சத்தில்) வாரிசுதாரர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதித்தளர்வு தேவைப்படும் இனங்களுக்கு மட்டும் விண்ணப்பங்கள் அரசிற்கு அனுப்பப்பட்டு அரசாணைகள் வெளியிடப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயலாக்கத்தினைத் தொடர்ந்து மூன்று அளவுருக்களில் நேர்மறையான மாற்றம், அதாவது, பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை, மாணவர்கள் பள்ளி இடைநிற்றலை குறைத்து, முறையாக பள்ளிக்கு வருவதை உறுதி செய்துள்ளது. மேலும் முக்கியமாக கிராம புறங்களில் உள்ள மாணவர்களின் ஊட்டச்சத்து நிலை மேம்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களின் கற்றல் திறன் அதிகரித்துள்ளது. அதன்மூலம் அவர்கள் வகுப்பறையில் அதிக கவனமுடன் கல்வி கற்க வழிவகை செய்துள்ளது. மேலும் சத்துணவு திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் பாலின வேறுபாடுகள் களையப்பெற்று பெண்

குழந்தைகளின் கல்வி, உணவு மற்றும் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

**தமிழக அரசு 2017–2018 ஆண்டுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகையாக ₹1,687.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. (இத்தொகை மைய மற்றும் மாநில அரசின் கூட்டு பங்களிப்புத் தொகையாகும்).**

**********

அத்தியாயம் –5

# முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன்

**5.1** kdpjdpd; tho;ehs; mjpfhpj;J tUtjhy; மக்கள் தொகையில் 60 tajpw;F Nkw;gl;l மூத்த குடிமக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. இந்திய ஜனத்தொகையில் முதியோர் எண்ணிக்கையின் அளவு அடுத்த நாற்பது ஆண்டுகளில் மேலும் கணிசமாக உயரும் என்றும், மொத்த ஜனத்தொகையில் 60 வயதிற்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டில் 8 சதவீதம் வளர்ச்சியடையும் என்றும், ஐக்கிய நாடுகள் மக்கள் தொகைப் பிரிவின் (UN Population Division 2011) புள்ளியல் ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. நடப்பு நூற்றாண்டின் அரையிறுதியில் இந்தியாவில் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களின் ஜனத்தொகை 323 மில்லியன் எண்ணிக்கையினை தாண்டக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. vdNt> kf;fs; njhifapy; mjpfhpj;J tUk; KதிNahர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அவர்கள் பாதுகாப்பான, கௌரவமிக்க வாழ்க்கையினை வாழ்வதற்காகவும் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை அவர்களது நலனுக்காக செயல்படுத்தி வருகிறது.

## 5.2 முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு இடையே அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மாநிலத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும் என்றும், இத்திட்டம் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களின் உதவியுடன் அவர்களது தார்மீக சமூகக் கடமைகளின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும் என்றும் 2011–2012 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக, 32 மாவட்டங்களில் (ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இல்லங்கள் வீதம்) 64 முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் 2012ல் தொடங்கப்பட்டது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகமும் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்கள் தங்கும் வசதியுடன் செயல்படுகிறது. இதன் மூலம், 1,189 குழந்தைகள் மற்றும் 1,144 முதியோர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் தற்போது 2016-17 ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களில் உள்ள 50 ஒருங்கிணைந்த

வளாகங்களுக்கு தொடர் செலவினம் ₹628.70 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்திற்கென 2017–2018 ஆம் நிதியாண்டில் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ₹670.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.3 மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்ட மற்றும் வசிப்பிடமற்ற 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற முதியோர்களின் வாழ்வைப் பாதுகாக்கும்பொருட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பெறும் முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசு மானிய உதவி அளித்து வருகிறது. இவ்வில்லங்களில் உணவு, உறைவிடம், உடை, மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது 19 மாவட்டங்களில் செயல்படும் 21 முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசால் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 40 முதியோர்களை பராமரிக்கும் பொருட்டு ₹5.60 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வில்லங்களில் 709 முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர். முதியோர் இல்லங்களில் பயனடையும்

முதியோர்களுக்கு உணவூட்டு மான்யம் **₹300–**லிருந்து **₹1200–**ஆக உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் பொருட்டு, **2016–2017** ஆம் நிதியாண்டில் **₹75.13** இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இத்திட்டத்திற்கென 2017–2018ம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் ₹64.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களை பராமரிப்பதற்கும், அவர்கள் நலன் காக்கவும் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உத்தரவாதமும், அங்கீகாரமும் அளித்து உறுதி செய்யப்பட்டுள்ளவாறு, சட்ட ரீதியான பாதுகாப்பை அளிக்கக்கூடிய பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், **2007**, இம்மாநிலத்தில் **29.09.2008** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் பராமரிப்பு மற்றும் நல விதிகள் உருவாக்கப்பட்டு, **31.12.2009** அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தனது குழந்தைகள் / வாரிசுதாரர்களிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரி பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட தீர்ப்பாயம் ஒன்று இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் 81 தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம் ஆண்டு வரையில் 2,030 விண்ணப்பங்கள் இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டு நாளது தேதி வரையில் 1,547 வழக்குகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

**இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்**

ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தன்னுடைய வருமானத்திலிருந்தோ அல்லது தன்னுடைய சொத்துக்களிலிருந்து வரும் வருவாயிலிருந்தோ தன்னைப் பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்தால்

தன்னுடைய பிள்ளைகள் அல்லது சட்டபூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைக் கேட்டுப்பெற இச்சட்டத்தின் பிரிவு 5–ன் கீழ் பின்வருமாறு விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இச்சட்டத்தின் கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்கள் 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- மூத்த குடிமக்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்த தவறினால் அபராதம் மற்றும் சிறை தண்டனை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவுக்கு ஏற்றாற்போன்றோ வழங்க தீர்ப்பாயம் ஆணையிடலாம் அல்லது ஒரு மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரை சிறை தண்டனை அளிக்கப்படும்.
- பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு ₹10,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- விசாரணை நிலுவையில் இருக்கும் பட்சத்தில், மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக மாதாந்திர பராமரிப்புத் தொகையினை அளிக்கக் கோரி அவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்களுக்கு தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம்.
- மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அம்மூத்த குடிமக்களை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால், அந்நபருக்கு 3 மாத சிறை தண்டனை அல்லது ₹5,000/– வரை அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனையாக அளிக்கப்படும்.

**5.5 முதியோர் இல்லங்களுக்கான குறைந்தபட்ச / அத்தியாவசிய தரம் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடல்**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்பட வேண்டிய குறைந்த பட்ச / அத்தியாவசிய அளவுகோல்கள் அரசு நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**5.6 சர்வதேச முதியோர் தினவிழா கொண்டாடுதல்**

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும், அவர்களிடம் உள்ள அனுபவம், அறிவு ஆகியவற்றை வெளிக்கொணரவும், முதியோர் நலன் காக்க ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றி உள்ள தீர்மானத்தை நிறைவேற்றும் பொருட்டும், தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சர்வதேச முதியோர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், மூத்த குடிமக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மூத்த குடிமக்களுக்கு ஏற்ற உணவு பற்றிய கண்காட்சி நடத்தப்படுகிறது. இவ்விழாவில் கலந்து கொள்பவர்களிடையே

விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மூத்த குடிமக்களின் நலன் தொடர்பான துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இவ்விழாவின்போது மூத்த குடிமக்களின் தேவைகள், பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதியோர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனையும் நடத்தப்படுகிறது. இவ்விழாவின் போது முதியோர்களின் நலனுக்காக சேவை புரியும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மேலும், இவ்விழாவில் முதியோர்களுக்குத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

**2017–2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ₹5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.7 முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக்குழுக்கள்

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டத்தினை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சிறப்பாகவும், இணைந்தும் செயல்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குவதற்காகவும், கண்காணிப்பதற்காகவும்

மாநில அளவில் தலைமைச் செயலரைத் தலைவராக கொண்டு 15 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டு உயர் மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது போன்று, மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு 3 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 2 மூத்த குடிமக்கள் உட்பட 4 அலுவல் சாரா உறுப்பினர்களை கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

**********

## அத்தியாயம் – 6

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், போதுமான ஊட்டச்சத்தினை வழங்கும் நோக்குடனும் அமைப்பு ரீதியான குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் நீண்ட நெடிய வரலாற்று பின்னணியினைப் பெற்றுள்ளது. **1956–இல்** அப்போதைய சென்னை மாகாணத்தில் பள்ளி மதிய உணவுத் திட்டம் செயல்பாட்டில் இருந்து வந்தது. **1961** ஆம் ஆண்டு, கேர் நிறுவனம் (CARE) **30,000** பள்ளிகளில் பயின்ற குழந்தைகள் பயன்பெற உணவுப் பொருள் (உடைத்த கோதுமை) வழங்கியது. **1967–ல்** இந்த திட்டம் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு 'மைய சமையல் கூடம்' (Central Kitchen) மூலமாக செயல்படுத்தப்பட்டு வந்தது. **1970–ல்** பள்ளி செல்லும் வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கான **சிறப்பு ஊட்டச்சத்து திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டது.

"***குழந்தைகளுக்கென செய்யப்படும் முதலீடு நாட்டின் எதிர்கால நலனுக்கான முதலீடு***" என்பதை உணர்ந்து, மத்திய அரசின் உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம் பெண்கள் மற்றும்

குழந்தைகளுக்கு சுகாதாரம், ஊட்டச்சத்து, முன்பருவக் கல்வி மற்றும் சுகாதாரக்கல்வி அளிப்பதேயாகும். இந்தியாவில், **1975**ஆம் ஆண்டு **மகாத்மா காந்தியடிகளின் 106**வது பிறந்த தினத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக **33** திட்டங்கள் (Projects), சிறு குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் வாழ்க்கைச் சுழற்சி மேம்பாட்டிற்கான தேவைகளைக் கருத்தில் கொண்டு **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்** வடிவமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆரம்ப நிலையிலேயே பாலின பாகுபாட்டை சீரமைத்து கருவிலிருக்கும் பெண் குழந்தைகள், சிறு குழந்தைகள் மற்றும், வளரிளம் பெண்கள் ஆகியோர் உயிர் வாழ்தல், வளர்ச்சி, முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை மேம்படுத்த சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும். தமிழ்நாட்டில் முதன் முதலாக, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமானது சென்னை– நகரம், நிலக்கோட்டை – கிராமம் மற்றும் மலைபிரதேசமான – தளி ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 6.1 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினைப் பரவலாக்குதல் – புதிய மையங்களைத் துவக்குதல்

இந்தியா முழுவதுமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினை பரவலாக்கவும், 14 இலட்சம் அங்கன்வாடி மையங்களை செயல்படுத்தவும், மத்திய அமைச்சக கூட்டுக் குழு சிறப்புப்பணி பிரிவின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசு புதிய மையங்களை உருவாக்க மக்கள்தொகை, ஊட்டச்சத்து, நிதி தொடர்பான வழிமுறைகளை திருத்தி அமைத்துள்ளது.

மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளின்படி அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான மக்கள் தொகை அளவுகோல் விவரங்கள்:-

| திட்டப் பகுதி | முதன்மை அங்கன்வாடி மையம் | | குறு அங்கன்வாடி மையம் | |
|---|---|---|---|---|
| | குறைந்தபட்ச மக்கள் தொகை | அதிபட்ச மக்கள் தொகை | குறைந்தபட்ச மக்கள் தொகை | அதிபட்ச மக்கள் தொகை |
| ஊரகப்பகுதி | 400 | 800 | 150 | 400 |
| நகர்புறம் | 400 | 800 | 150 | 400 |
| மலைப்பகுதி | 300 | 800 | 150 | 300 |

தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் 49,499 முதன்மை அங்கன்வாடி மையங்கள், 4,940 குறு அங்கன்வாடி மையங்கள், ஆக மொத்தம்

**54,439** மையங்கள் **434** திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இதில் **385** திட்டப்பகுதிகள் ஊரகப் பகுதிகளிலும், **47** திட்டப்பகுதிகள் நகர்ப்புறங்களிலும் **2** திட்டப்பகுதிகள் மலைப் பகுதிகளிலும் செயல்படுகின்றன.

## 6.2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் தொலைநோக்குப் பார்வை

மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் குறிக்கோள்கள்

1. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான உடல், மன, அறிவு மற்றும் மன எழுச்சி வளர்ச்சி கிடைத்தல்
2. மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, குழந்தைநேயம், அதிக கவனத்துடன் சரியான ஆரம்ப கால பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கற்றல் ஆகியவற்றை அளித்தல்
3. ஆண்–பெண் சமநிலையை மேம்படுத்தும் குடும்பம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்துதல்

## 6.3 தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் அமைப்பு

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

↓

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (குழும இயக்குநர்) / மாநில குழந்தை வளர்ச்சி சங்கம்

↓

மாவட்ட திட்ட அலுவலகம் / மாவட்ட குழந்தை வளர்ச்சி சங்கம், 32 மாவட்டங்கள்

↓

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் – 434 திட்டங்கள் (385 ஊரகம், 47 நகரம், மலைப்பிரதேசம் 2)

↓

அங்கன்வாடி மையங்கள் 54,439 (முதன்மை மையங்கள்–49,499 மற்றும் குறு மையங்கள்–4,940)

## 6.4 நோக்கங்கள் மற்றும் வழிமுறைகள்

- அனைத்து நிலைகளிலும் அத்தியாவசிய பணிகளை நெறிப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்துதல்

  — ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுத்தல், குழந்தைகள் வாழ்க்கையை நெறிப்படுத்தி நல்லமுறையில் துவங்க தேவையானவற்றை உறுதி செய்தல், மூன்று வயதிற்குட்பட்ட ஆரம்ப கால குழந்தைகளின் கவனிப்பு மற்றும் கற்கும் சூழ்நிலைக்கு சிறப்பு கவனம் அளித்தல் போன்றவற்றிற்காக ஒருங்கிணைந்த குழந்தை

வளர்ச்சிப் பணிகள் திட்டத்தைக் குழும இயக்ககத்தின் கீழ் செயல்படுத்துதல்

- அனைத்து நிலைகளிலும் செயல்திறனை அதிகரித்தல்

    — திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சாதனைகளை எய்த அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் குழு செயல்பாட்டின் அடிப்படையில் பணிபுரிய பயிற்சிகள் அளித்தல்

- துறைகளுக்கு இடையேயான சரியான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல்

    — தரமான நலப்பணிகள் மக்களைச் சென்றடைய சுகாதாரத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய துறைகளுடனான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல் மற்றும் பலப்படுத்துதல்

- சமுதாய விழிப்புணர்வையும், பங்களிப்பையும் அனைத்து நிலைகளிலும் மேம்படுத்துதல்

    — பயனாளிகள் மற்றும் பொது மக்களிடையே குழந்தை வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் அளிக்கப்படும் நான்கு அடிப்படை குழந்தை வளர்ச்சிப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அதற்கான தன்னார்வ ஈடுபாட்டையும், சமுதாய ஆதரவையும் மேம்படுத்துதல்.

- குழந்தை வளர்ச்சிப் பணிகளுக்கான தகவல் தளம் மற்றும் அறிவுசார் தளத்தை அமைத்தல்

— ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மேலாண்மை தகவல் அமைப்பை பலப்படுத்துதல். அடிப்படை தகவல் அமைப்புக்காக தகவல் தொடர்புக்கான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல். தகவல்களைப் பரப்ப, பகிர்ந்து கொள்ள வசதிகளை ஏற்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்

## 6.5 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டக் குழுமத்தின் கீழ் வழங்கப்படும் நலப்பணிகள்

i. ஆரம்ப நிலை குழந்தைகள் கவனிப்பு, கல்வி மற்றும் வளர்ச்சி
   - இணை உணவு வழங்கல்
   - முன்பருவக் கல்வி அளித்தல்

ii. ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் கவனிப்பு
   - பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்.
   - மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையை சமுதாய அளவில் மேலாண்மை செய்தல்.

iii. சுகாதாரப் பணிகள்
   - உடல் நலப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி வழங்குதலை உறுதி செய்தல்.
   - மருத்துவப் பரிந்துரை செய்தல்

iv. சமுதாயப் பங்கேற்பு, விழிப்புணர்வு, ஆதரவு திரட்டுதல், தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் அளித்தல்.

### 6.6 திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள்

i. பிறந்தது முதல் 72 மாதம் முடிய உள்ள குழந்தைகள்
ii. வளரிளம் பெண்கள்
iii. கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்
iv. முதியோர் ஒய்வூதியம் பெறுபவர்கள்

### 6.6.1 2017–2018–ஆம் ஆண்டுக்கான நிதி மதிப்பீடு பின்வருமாறு:-

(₹கோடியில்)

| மொத்த திட்ட செலவினம் | மத்திய அரசின் பங்கு | மாநிலத்தின் மொத்த பங்களிப்பு |
|---|---|---|
| 1917.55 | 681.88 | 1235.67 |

2017–2018 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்களிப்பு 64% மற்றும் மத்திய அரசின் பங்களிப்பு 36% ஆகும்.

### 6.7 இணை உணவு

பல்வேறு ஊட்டச்சத்து திட்டங்களைச் செயல்படுத்தி “ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலம்” என்ற நிலையை அடைவதற்கு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அங்கன்வாடி பயனாளிகள் அன்றாடம் உட்கொள்ளும் உணவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உணவு இவற்றிற்கு இடையே ஏற்படும் சக்தி மற்றும் புரதச்சத்து குறைபாட்டினைச் சரிசெய்ய ஏதுவாக கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### 6.7.1 ஊட்டச்சத்து மாவு

பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துவதற்கதாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் பயனாளிகளான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், 9 மாவட்டங்களைச் சேர்ந்த வளரிளம் பெண்கள் மற்றும் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுவதற்கு வாய்ப்புள்ள 5 மாவட்டங்களில் உள்ள 3–5 வயதுடைய மிதமான மற்றும் கடும் எடைக்குறைவு உள்ள குழந்தைகளுக்கும் இணை உணவு வழங்கப்படுகிறது.

**சத்துமாவில் அடங்கியுள்ள மூலப் பொருட்கள்**

| வ.எண் | மூலப் பொருட்கள் | கிராம் |
|---|---|---|
| 1 | கோதுமை/சோளம்/கம்பு | 52 |
| 2 | வெல்லத் தூள் | 30 |
| 3 | கடலைப் பருப்பு | 12 |
| 4 | முளைகட்டிய கேழ்வரகு | 5 |
| 5 | தாதுக்கள் (ம) வைட்டமின் கலவை | 1 |
| | மொத்தம் | 100 |

## 6.7.2 வார உணவு அட்டவணை

| வயது | வழங்கப்படும் உணவு | இணைஉணவு/சத்துணவு வழங்கப்படும் அளவு மற்றும் செலவினம் | முயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 மாதம் முதல் 1 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி /நாளொன்றுக்கு ₹8.30 செலவில் மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் வழங்கப்படுகிறது | 3,65,464 |
| 1 முதல் 2 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + வாரத்திற்கு ஒரு வேக வைக்கப்பட்ட முட்டை (புதன் கிழமை) | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி /நாளொன்றுக்கு ₹8.30 செலவில் மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் வழங்கப்படுகிறது | 6,77,959 |

| | | | |
|---|---|---|---|
| 2 முதல் 3 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + சத்துணவு + 20கிராம் கருப்பு கொண்டைக் கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக் கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி /நாளொன்றுக்கு ₹8.30 செலவில் மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் + சத்துணவு ₹4.79 செலவில் வழங்கப்படுகிறது. | 7,06,121 |
| 3 முதல் 5 வயதுடைய குழந்தைகள் | சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) + 20 கிராம் கருப்பு கொண்டைக் கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) | ₹4.79 செலவில் நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) வழங்கப்படுகிறது. | 6,52,558 |

| | | | |
|---|---|---|---|
| | + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக்கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | | |
| கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | இணை உணவு | நாளொன்றுக்கு ₹10.22 செலவில் 160கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது | 6,59,000 |
| வளரிளம் பெண்கள் | இணை உணவு | நாளொன்றுக்கு ₹8.30 செலவில் 130கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது | 4,12,119 |
| ஒய்வூதியம் பெறும் முதியோர்கள் | சூடான சத்துணவு | நாளொன்றுக்கு 200 கிராம் வழங்கப்படுகிறது | 71 |
| | | மொத்தம் | 34,73,292 |

### 6.7.3 நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் சத்துமாவின் அளவு மற்றும் செலவின விவரம்

| பயனாளிகளின் விவரம் | நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் ஊட்டச் சத்துமாவின் அளவு (கிராமில்) | தொகை (₹) |
|---|---|---|
| 6 மாதம் முதல் 36 மாத வரையிலான இயல்பு நிலை மற்றும் மிதமான எடை குறைவுடைய குழந்தைகள் | 130 | 8.30 |
| 6 மாதம் முதல் 36 மாத வரையிலான கடுமையான எடை குறைவுடைய குழந்தைகள் | 190 | 12.14 |
| வளரிளம் பெண்கள் | 130 | 8.30 |
| கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 160 | 10.22 |

இணை உணவுக்கான செலவினத்தை மத்திய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற விகிதாச்சாரத்தில் மேற்கொள்ள வேண்டும் என்றாலும் தமிழக அரசு இந்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாக செலவினம் மேற்கொள்கிறது. மாதந்தோறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் சத்து மாவு, உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற பகுப்பாய்வு கூடங்களில் ஆய்வு செய்து அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

### 6.7.4 ஜப்பானிய மூளைக்காய்ச்சல் பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள அதிகமான பகுதிகளில் இணை உணவு வழங்குதல்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஒரு வைரஸ் தொற்று நோயாகும். ஊட்டச்சத்து குறைபாடு குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய் கடுமையான தாக்குதலுக்கு ஒரு முக்கியமான காரணியாகும். எனவே, நோய் தொற்று ஏற்படும் அபாயகரமான பகுதிகளில் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கரூர், மதுரை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களை ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயால் அதிக பாதிப்புக்கு உள்ளாகும் மாவட்டங்களாக கண்டறியப்பட்டுள்ளன. ஊட்டச்சத்துக் குறைபாடு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயிற்கான ஒரு காரணம் என்பதால் அம்மாவட்டங்களில் உள்ள 37 முதல் 60 மாதமுடைய மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 கிராம் வீதம் வருடத்திற்கு 300 நாட்களுக்கு ஊட்டச்சத்து மாவு அங்கன்வாடி மையங்கள் வாயிலாக வழங்கப்படுகிறது.

## 6.7.5 அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும் பல்வேறு வகையான கலவை சாதம்

அங்கன்வாடி மையத்தில் பயன்பெறும் குழந்தைகளுக்கு அவர்களின் ஜீரண சக்தி மற்றும் சிறப்பு ஊட்டச்சத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஊட்டச்சத்து நிபுணர்களின் ஆலோசனை பெற்று பல்வேறு வகையான கலவை சாத வகைகள் **20.03.2013** முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் அதனுடைய வரவேற்பினைத் தொடர்ந்து, **15.08.2014** முதல் மாநிலத்தின் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

அங்கன்வாடியில் பயன்பெறும் **2** முதல் **5**+ வயதுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான உணவு வகைகளின் விவரம் :–

| **கிழமை** | **உணவு வகைகள்** |
|---|---|
| திங்கள் | தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை |
| செவ்வாய் | கலவை சாதம் + கருப்பு கொண்டைக்கடலை (அ) பச்சைப் பயறு |
| புதன் | காய்கறி புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழன் | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளி | பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக் கிழங்கு |
| சனி | கலவை சாதம் |
| ஞாயிறு | வீட்டிற்கு எடுத்து செல்லும் வகையில் உலர் உணவுப் பொருட்கள் |

### 6.7.6 செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்கள்

- இரும்புச்சத்து மற்றும் அயோடின் கலந்த (இருமுறை செறிவூட்டப்பட்டது) உப்பு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும், தமிழ்நாடு அரசு உப்புக் கழகம் மூலமாக வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம், வைட்டமின் A மற்றும் வைட்டமின் D சத்துக்களுடன் செறிவூட்டப்பட்ட பனை எண்ணெய் (Palm Oil) அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்படுகிறது.
- இணை உணவு மாவில் ஊட்டச்சத்தினை அதிகப்படுத்துவதற்கு நுண் ஊட்டச்சத்துக்கள் மற்றும் கரையும் வைட்டமின்கள் சேர்க்கப்படுகிறது.

### 6.7.7 ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE)

ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி என்பது கருவாக உருவானது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அவர்களின் உடல், மொழி, அறிவு, சமூக மன எழுச்சி, படைப்பாற்றல் மற்றும் அழகுணர்வைப் பாராட்டுதல் ஆகிய அனைத்து வளர்ச்சிகளுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து அம்சங்கள் ஒருங்கே கிடைக்கப் பெறுவதைப் பூர்த்தி செய்யும் திட்டங்களையும், சலுகைகளையும் குறிக்கிறது. இத்திட்டம் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு வளர்ச்சிப் படிநிலைக்கும் தொடர்ச்சி அளிக்கும் வகையில்

**3** வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தேவைகளான கவனிப்பு, ஆரம்ப கால தூண்டுதல் செயல்பாடுகள், உரையாடுதல் போன்றவைகளையும், **3–6** வயது குழந்தைகளின் வளர்ச்சிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முன்பருவக் கல்வியும், **5–6** வயது குழந்தைகளுக்கு திட்டமிட்ட செயல்பாடுகள் மூலம் பள்ளி செல்ல தயார்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி என்பது பிரிக்கமுடியாத ஆதாரங்களை உள்ளடக்கி, கவனிப்பு, சுகாதாரம், ஊட்டச்சத்து, விளையாட்டு மற்றும் ஆரம்ப நிலைக் கற்றலைப் பாதுகாப்பாக குழந்தைகள் செயல்படுத்தக்கூடிய சூழ்நிலையில் வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இது அத்தியாவசியமான அடித்தளமாக வாழ்க்கை முழுவதிலும் வளர்ச்சிக்கும் மற்றும் கற்றலுக்கும் மனித முன்னேற்றத்திற்கும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இத்திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மையங்கள் “**எழுச்சி மிகு மையங்களாக**” மாற்றப்பட்டு **3** வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இனிமையான கற்றல் சூழல், பச்சிளம் குழந்தைகளுக்கு பராமரிப்பு, தூண்டுதல், உரையாடுதல் போன்ற செயல்பாடுகள், **3** முதல் **6** வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு

முன்பருவக் கல்வி, 5–6 வயது முதல் குழந்தைகளுக்கு பள்ளிக்கு செல்ல தயார்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் தினசரி 4 மணி நேரத்திற்கு திட்டமிடப்பட்டு, அர்ப்பணிப்பு உணர்வுடன் குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கை 2013–இன் அடிப்படையில் தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மூலம் மாநில தேவைக்கேற்ப, குழந்தைகளின் வயது மற்றும் வளர்ச்சிக்கேற்ற வகையில் சூழ்நிலைக்கேற்ற ஆண்டு பாடத்திட்டம் "**ஆடிப்பாடி விளையாடு பாப்பா**" என்ற புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, அது மத்திய அரசாலும் அங்கீகரிக்கப்பட்டு, அங்கன்வாடி மையங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் 11 மாதங்களுக்கு கருத்துகளின் அடிப்படையில் உரிய செயல்பாடுகளை குழந்தைகளுக்கு வழங்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. 12–ஆம் மாதம் நினைவூட்டலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையான கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கான ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்விக்கான பாடத்திட்டப் புத்தகங்கள், குழந்தைகளுக்கான செயல்பாட்டு புத்தகங்கள் மற்றும் ஆய்வு அட்டைகள் ஆகியவை அனைத்து

அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், **2016–2017**ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி மையங்களில் பயின்று தொடக்கப்பள்ளிக்கு செல்ல உள்ள அனைத்து குழந்தைகளுக்கும், முன்பருவக் கல்வி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.7.8 ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சி

முறைசாரா முன்பருவக்கல்வித் திட்டம் என்பது வலுப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளில் மிகவும் அத்தியாவசியமான பிரிவாக உள்ளது. இது, சிறு குழந்தைகளுக்கான முழுமையான வளர்ச்சியை குறிக்கோளாக கொண்டுள்ளது. ஆரம்பகால கற்றலுக்கான வாய்ப்புகளை வழங்கிடத் தக்க வகையில், அங்கன்வாடி பணியாளர்களின் திறன்களை மேம்படச் செய்வதே இப்பயிற்சியின் நோக்கமாகும். இப்பயிற்சியானது மூன்றடுக்கு முறையில், மாநில, மாவட்ட மற்றும் தொகுதி அளவில் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் “**ஆடிப்பாடி விளையாடு பாப்பா**” பாடத்திட்டத்தை சிறப்பாக குழந்தைகளுக்கு கற்றல் மற்றும் கற்பிக்கும் முறைகள், குழந்தைகளுக்கான செயல்பாட்டுப் புத்தகங்கள் மற்றும் ஆய்வு அட்டைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் விதம் குறித்த அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

2015–2016ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்தின் வழிகாட்டுதலின்படி, ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி குறித்த பயிற்சி முதல் கட்டமாக நடத்தப்பட்டது. இதற்காக ₹387.20 இலட்சம் நிதி செலவிடப்பட்டது.

### 6.8 சுகாதாரம்

#### 6.8.1 எடை கண்காணித்தல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பிறந்த மாதம் முதல் 60 மாதம் வரையிலுள்ள குழந்தைகளின் எடை எடுக்கப்பட்டு, அவை உலக சுகாதார நிறுவன வளர்ச்சி பதிவேட்டில் பதியப்பட்டு, வளர்ச்சி வளைவின் அடிப்படையில் அவர்களின் ஊட்டச்சத்து நிலை கண்டறியப்பட்டு, ஊட்டச்சத்துக் குறைபாட்டினை குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

#### 6.8.2 அங்கன்வாடி மையங்களுக்கு எடைக் கருவிகள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களில், அங்கன்வாடி குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் எடையைக் கண்காணிக்க, வயதிற்கு ஏற்ற எடைக் கருவிகள், குழந்தைகள் எடைக்கருவிகள், பார் (Bar) எடைக்கருவிகள் மற்றும் பெரியவர்களுக்கான எடைக்கருவி போன்றவை வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பழுதடைந்த

15 சதவீத எடைக்கருவிகளை மாற்றி, வேறு எடைக்கருவிகள் வழங்கப்படுகிறது.

### 6.8.3 இரத்த சோகை

குழந்தைகள் மற்றும் பெண்களிடையே காணப்படும் மிக முக்கியமான பொது சுகாதார பிரச்சனைகளில் இரத்த சோகையும் ஒன்று. ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்த சோகையின் கடுமையான பாதிப்புள்ள பச்சிளம் குழந்தைகள், முன்பருவக் கல்வி குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு இரும்புச்சத்து மாத்திரை/சிரப் வழங்கப்படுகிறது. மேலும், இரத்த சோகை நோயினைச் சமாளிக்க, இரும்புச் சத்து அதிகமான மற்றும் இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட உணவின் முக்கியத்துவம் மற்றும் நன்மைகள் குறித்து பெண்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### 6.8.4 அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் மருந்து பெட்டிகள் வழங்குதல்

அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் பாரசிடமால் மாத்திரை/சிரப், வாய்வழி கரைசல் பொட்டலங்கள், பொவிடோன் அயோடின் களிம்பு, பாண்டேஜ் துணி, பஞ்சு, இரும்புச் சத்து சிரப், குடற்புழு நீக்க சிரப், மல்டி வைட்டமின் சொட்டு மருந்து, ஜிங்க் (துத்தநாகம்) சத்து மாத்திரைகள் மற்றும் பொவிடோன்

அயோடின் கரைசல் ஆகியவை அடங்கிய மருந்துப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இவை பொதுவான உடல் உபாதைகளான ஜுரம், பேதி, காயத்திற்கு மருந்து கட்டுவதற்கும், தோல் தொற்றுகளை குணப்படுத்தவும் உதவுகிறது. இம்மருந்துகள் மாநில பொது சுகாதாரத் துறையின் ஆலோசனையின் பேரில் அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

மருந்தை கையாளும் விதம், திறன், அறிவு, காலாவதியாகும் தேதி அதாவது மருந்தை வீணாக்குதல்/தவறாக பயன்படுத்துதல், அளவு, பாதகமான விளைவுகள், குழந்தைகளுக்கு எட்டாத நிலையில் மருந்துகளை பாதுகாப்பாக வைத்தல், போன்ற தகுந்த வழிமுறைகள் அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மூலம் மருந்துகள் பெறப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. உயர் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் / அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**2017–2018 ஆம் ஆண்டிற்கு அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்கிட ₹5.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 6.8.5 தடுப்பூசித் திட்டம்

ஒரு நபர் தொற்றுநோயால் பாதிக்கப்படும்பொழுது, அத்தொற்றினை தடுப்பதற்கு தடுப்பூசி போடப்படுகிறது. இத்தடுப்பூசி அடுத்தடுத்த தொற்றுகள் அல்லது நோய்களுக்கு எதிராக அந்த நபரை பாதுகாப்பதற்கும், உடலிலுள்ள நோய் எதிர்ப்பு அமைப்பினை தூண்டுகிறது. துணை சுகாதார நிலையத்தில் உள்ள கிராம சுகாதார செவிலியர் மற்றும் அங்கன்வாடி பணியாளர் இருவரும் இணைந்து கர்ப்பகால பராமரிப்பு மற்றும் தடுப்பூசிப் பணிகள் போன்றவற்றில் பயனாளிகளை திரட்டி ஊக்கமளித்து வருகின்றனர். மேலும் அங்கன்வாடி பணியாளர் விடுபட்ட குழந்தைகளைக் கண்டறிந்து, கிராம சுகாதார செவிலியருக்கு துணையாக உதவி செய்து வருகிறார். கிராமப்புற மக்களுக்கு அடிப்படை சுகாதார சேவைகள் கிடைக்க செய்வதில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மிகவும் பங்கு வகிக்கிறது.

குழந்தை பிறந்தவுடன் அல்லது குழந்தைக்கு ஒரு வயது ஆவதற்கு முன்பு காசநோய் தடுப்பூசி (BCG) வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி குழந்தைகளுக்கு தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி, மஞ்சள்காமாலை–பி, ஹிமோபிளஸ் இன்புளுயன்ஸா–B (நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல்) ஆகிய ஐந்து கொடிய

நோய்களைத் தடுக்கும் வகையில் ஒரே தடுப்பூசி **21.12.2011** முதல் அறிமுகப் படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

தட்டம்மை மற்றும் ரூபெல்லா நிகழ்வுகளை குறைப்பதற்கென, தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி முகாம் சுகாதாரத் துறையினருடன் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மைய பயனாளிகள் **100** சதவிகிதம் பயன்பெறும் வகையில், மேற்பார்வையாளர்கள், பணியாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஊக்கம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

### 6.9 முன்பருவக் கல்வி உபகரணங்கள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களில் முறைசாரா மற்றும் விளையாட்டு மூலமாக **2** முதல் **5** வரையுள்ள குழந்தைகளுக்கு மழலையர் கல்வி அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளின் உடல், மொழி, அறிவு, சமூக மன எழுச்சி மற்றும் அழகுணர்வைப் பாராட்டுதல் ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கு ஏற்ற கற்றல் சூழலை வழங்குவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மையங்களுக்கும் முன்பருவக் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உபகரணங்களைக் கையாள்வது பற்றி அங்கன்வாடி பணியாளர்களுக்கு உரிய பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய முன்பருவக் கல்வி குழந்தைப் பராமரிப்புக் கொள்கை, 2013–இன் படி அங்கன்வாடி மையங்களை **“எழுச்சிமிகு முன்பருவ குழந்தை வளர்ச்சி மையங்களாக”** மாற்றுவதற்கான செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2017–2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ₹15.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 6.10 அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ணச் சீருடைகள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளை மேலும் ஊக்கப்படுத்தும் பொருட்டும், ஊட்டச்சத்து அளித்து, முன் பருவ கல்வி மற்றும் முறைசாரா கல்வி ஆகியவற்றினை வழங்குவது மட்டுமல்லாமல், அக்குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு தவறாது அனுப்பிட ஊக்கப்படுத்தும் வகையிலும், **2012–2013** ஆம் ஆண்டு, முன்னோடித் திட்டமாக மைய குழந்தைகளுக்கு ஒரு இணை வண்ணச் சீருடை ₹125 செலவில் இரண்டு இணை வண்ணச் சீருடைகள் சென்னை, வேலூர், தேனி, திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் வண்ணச் சீருடை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் சிறப்பாக

நடைமுறைபடுத்தப்பட்டதன் அடிப்படையில், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம், மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களுக்கும் கூடுதலாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 3,74,243 குழந்தைகள் பயனடையும் வகையில் முழுமையான தமிழக அரசு நிதியாக ₹9.36 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 6.11 அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள்

### 6.11.1 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் பல்வேறு நிதி ஆதாரங்கள் மூலம் படிப்படியாக கட்டப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பேரூராட்சி துறை ஆகிய துறைகளின் வாயிலாக இதுவரை 8,092 மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2016–2017ஆம் ஆண்டில் 1,000 அங்கன்வாடி மையங்களுக்கு ஒரு மையத்திற்கு ₹7.00 இலட்சம் வீதம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை

வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 2017–2018 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் ஒருங்கிணைப்பு மூலம் 1,000 அங்கன்வாடி மையங்களுக்கு ஒரு மையத்திற்கு ₹7.00 இலட்சம் வீதம் புதிய கட்டடங்கள் கட்டப்படவுள்ளது.

### 6.11.2 அங்கன்வாடி மையம் மற்றும் மழலையர் பராமரிப்பகம் தோற்றுவித்தல்

பணிக்குச் செல்லும் தாய்மார்களின் 5 வயது வரையுள்ள குழந்தைகளைப் பராமரிப்பதற்கென **“211 அங்கன்வாடி மற்றும் மழலையர் பராமரிப்பகங்கள்”** 2014–2015 ஆம் ஆண்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம்,பெரம்பலூர், சேலம், திண்டுக்கல், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 13 மாவட்டங்களில் ₹2.31 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை 3,125 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### 6.11.3 அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்குதல்

அங்கன்வாடி மையங்களில் சமைக்கும் நேரத்தை சேமிக்கவும், சத்தான உணவு சமைக்கவும், புகையில்லாமல் சுற்று சூழலைப் பாதுகாக்கவும் ஒவ்வொரு மையத்திற்கும் எரிவாயு இணைப்புடன் அடுப்பு, பிரஷர் குக்கர் மற்றும் சமையல் மேடை அமைத்தல் ஆகிய பணிகளுக்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 54,439 மையங்களில், இதுநாள் வரையில் 50,201 அங்கன்வாடி மையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4,238 மையங்களையும் படிப்படியாக நவீன மயமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6.12 வளரிளம் பெண்களுக்கான திட்டங்கள்

### 6.12.1. கிஷோரி சக்தி யோஜனா

இத்திட்டம் 23 மாவட்டங்களை உள்ளடக்கிய 295 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 11 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்களின் வாழ்க்கைத்தரம், தொழிற்திறன் மற்றும் ஆளுமைத் திறனை மேம்படுத்துவதற்காகவும், தன்சுத்தம், சுகாதாரம், ஊட்டச்சத்து, சட்ட உரிமைகள், குடும்ப நலன் மற்றும் மன அழுத்த மேலாண்மை ஆகிய தகவல்கள் குறித்து அவர்களுக்கு

விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. **16** முதல் **18** வயதான வளரிளம் பெண்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் ஆடை வடிவமைப்பு, ஜர்தௌசி வேலைப்பாடு, செயற்கை ஆபரணங்கள் தயாரிப்பு, கோழி வளர்ப்பு, அலைபேசி பழுதுநீக்கச் சேவை, அலங்கார மீன்கள் வளர்ப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள், மின் பழுதுநீக்கம் மற்றும் அடிப்படை மின்சார சேவைகள் போன்ற துறைகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், அடிப்படை பயிற்சிக்கான செலவுத் தொகை, பயணப்படி தொகை, தங்கும் வசதி மற்றும் உணவிற்கான செலவுத் தொகை, ஆய்விற்கான செலவினம் போன்றவை, இத்திட்டத் தொகையுடன் சேர்த்து, கூடுதலாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. கிஷோரி சக்தி யோஜனா திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு **₹1.60** கோடி மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2017–2018 ஆம் ஆண்டிற்கு கிஷோரி சக்தி யோஜனா திட்டத்திற்கு ₹3.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.12.2 வளரிளம் பெண்களுக்கானதிட்டம் (சப்லா)**

வளரிளம் பெண்களின் பல்வேறு பரிமாணங்களில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இத்திட்டம் **2011–2012**–இல் அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை,

கோயம்புத்தூர், கடலூர், இராமநாதபுரம், திருவண்ணாமலை மதுரை, சேலம், கன்னியாகுமரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள 139 வட்டாரங்களில் முன்னோடித் திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், இணை உணவு வழங்குதல் மற்றும் இணை உணவு அல்லாத பிற பணிகள் என இரண்டு பிரிவுகளின் கீழ் நலப்பணிகள் அளிக்கப்படுகின்றன. அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்யப்பட்ட 11 முதல் 18 வயதான பள்ளி செல்லாத வளரிளம் பெண்கள் மற்றும் 15 முதல் 18 வயதான பள்ளி செல்லும் அனைத்து வளரிளம் பெண்களுக்கும் இணை உணவு, வீட்டுக்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில் வருடத்தில் 300 நாட்களுக்கு, தலா ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ₹8.30 செலவில் வழங்கப்படுகிறது. இதற்கான 50 சதவிகித நிதியினை மாநில அரசு அளிக்கிறது. இணை உணவிற்கென 2016–2017ஆம் வருடத்திற்கு ₹95.44 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் 4.12 இலட்சம் வளரிளம் பெண்கள் பயனடைந்துள்ளனர். வளரிளம் பெண்களுக்கான இணை உணவு அல்லாத பிற பணிகளின் கீழ், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்குதல், வாழ்க்கைத் திறன் கல்வி, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக்கல்வி

அளித்தல், வளரிளம் பெண்களை கல்வி பயில ஊக்குவித்தல், ஆலோசனை வழங்குதல், உடல் பரிசோதனை செய்தல், தொழிற்பயிற்சி அளித்தல் போன்ற நலப்பணிகள் அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 16 முதல் 18 வயதுடைய வளரிளம் பெண்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாகவும், அழகுக்கலைப் பயிற்சி, கணினி பயிற்சி, தையற்பயிற்சி, வீட்டு உபயோகப்பொருட்கள் பழுதுநீக்கும் பயிற்சி, அடிப்படை மின்சாரப் பணிகள் பயிற்சி, கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சி என பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகளின் மூலம் வளரிளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதால் அவர்களின் பொருளாதார நிலை மேம்பாடு அடைகிறது.

**2017–2018ஆம் ஆண்டிற்கு, வளரிளம் பெண்களுக்கு இணை உணவு வழங்கல் திட்டத்தின் கீழ் ₹102.58 கோடி மற்றும் இணை உணவு அல்லாத பிற பணிகளுக்கு ₹5.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 6.13 மகப்பேறு நிதியுதவித் திட்டம் (Matritva Sahyog Yojana -MSY)

மத்திய அரசு 2011–2012ஆம் ஆண்டில் மகப்பேறு நல உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஒருங்கிணைந்த குழந்தை

வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் வாயிலாக தமிழக அரசின் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முலம் செயல்படுத்தப்பட்டு வரும் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்துடன் இணைந்து முன்னோடி திட்டமாக கடலூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நல உதவியாக ₹4,000–ஐ வழங்கி வந்தது.

பின்னர் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், 2013–ன் படி, 2013–ஆம் ஆண்டு, ஜீலை மாதம் முதல் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வந்த பணப்பயன் ₹6,000 ஆக உயர்த்தப்பட்டு நிபந்தனைகளுக்குட்பட்ட மாநில அரசின் 60:40 என்ற விகித நிதிப்பகிர்வின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, இந்த மகப்பேறு நல நிதியுதவித் திட்டம் நிபந்தனைகளுக்குட்பட்டு பயனாளி ஒருவருக்கு ₹6,000 என மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் 01.01.2017 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்விரிவுபடுத்தப்பட்ட மகப்பேறு நல உதவித் திட்டம் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முலம் செயல்படுத்தப்பட்டு வரும் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தில் வழங்கப்பட்டு வரும்

உதவித் தொகை ₹18,000–த்துடன் இணைந்து வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2016–2017 ஆம் ஆண்டில் ₹20.86 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**6.14 பயிற்சி**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பயிற்சி என்பது முக்கிய அடிப்படை அம்சமாக உள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட சேவைகளைத் திறமையாகவும், தரமாகவும், மேம்படுத்தப்பட்ட வகையிலும் வழங்கி திட்டப்பணிகளின் நோக்கத்தை அடைவது என்பது திட்டத்தினை களத்தில் முன்னெடுத்து செல்லும் களப்பணியாளர்களின் செயல் திறனைப் பொறுத்து உள்ளது.

சமுதாயத்தில் அனைத்து தகுதி பெற்ற பயனாளிகளுக்கும் திட்ட சேவைகளை வழங்குவதிலும், திட்டப் பணியாளர்களின் செயல்பாடுகளின் தரத்தினை உறுதி செய்வதிலும், அதைத் தக்க வைப்பதிலும் அவர்களுக்கான திறன்வளர்ப்பு முயற்சிகள் முக்கிய அம்சமாக விளங்குகின்றன. மேலும், சமுதாய வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் மக்களை ஒருங்கிணைத்து செல்லும் பற்பல உத்திகளை திறமையாக கையாள, நன்கு பயிற்சி பெற்ற களப்பணியாளர்களே மிகுந்த திறன் பெற்றிருப்பார்கள். அதற்கேற்ப, அனைத்து கடைநிலை

திட்டப் பணியாளர்களுக்கும், தெளிவான அறிவு (ம) திறன் மேம்பாடு பெறத்தக்க வகையில் பயிற்சித் திட்டம் உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் திட்டப் பயன்களை திறம்பட கொண்டு செல்பவர்களாக இருப்பதுடன், சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையே நல்ல பழக்க வழக்கங்கள் மற்றும் மனமாற்றங்களை ஏற்படுத்தும் "சமூக முகவர்"களாகவும் "மாற்று" முகவர்களாகவும் செயல்படுவர்.

தமிழ்நாட்டில் மட்டுமே பரவலாக்கப்பட்ட, தனித்துவம் வாய்ந்த, மூன்றடுக்கு பயிற்சி முறை அனைத்து நிலை களப்பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. திறன் மிக்க, செலவு குறைவான, பொருளாதார பயன் நிரம்பிய, இப்பயிற்சி முறை பல தரப்பாலும் சிறப்பாக பாராட்டப்படும் முறையாக உள்ளது. அது மட்டுமின்றி பயிற்சிகள் அளிக்கப்படும் போதும், மேற்பார்வையாளர்களின் களப்பணியின் போதும், பயிற்சி மதிப்பீடு உடனுக்குடன் செய்யப்பட்டு தேவையான உரிய வழிகாட்டுதல்கள் களத்தில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் களப்பணியாளர்களுக்கு பணிப்பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்கு ஒரு பயிற்றுனர் பணிபுரிந்து வருகிறார். மாநில அளவில், இடைநிலை அளவில் மற்றும் திட்ட அளவில், பல்வகை பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் விபரம்:–

| வ. எண். | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சியின் பெயர் | பயிற்சி பெறுபவர்கள் |
|---|---|---|---|
| 1. | மாநில பயிற்சி மையம், தரமணி, சென்னை–113. | பணிப்பயிற்சி மற்றும் புத்தாக்கப்பயிற்சி | குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் |
| 2. | | பணிப்பயிற்சி/ புத்தறிவுப் பயிற்சி (ம) புத்தாக்கப்பயிற்சி | அங்கன்வாடி பயிற்சி மைய பயிற்றுநர்கள் (மேற்பார்வையாளர்கள் நிலை–1) |
| 3. | இடைநிலை பயிற்சி மையம், இந்திய குழந்தைகள் நலச்சங்கம், சென்னை. | பணிப் பயிற்சி/ புத்தாக்கப்பயிற்சி | மேற்பார்வையாளர் நிலை – ,, |
| 4. | மாவட்டங்களில் உள்ள வட்டாரங்களில், திட்ட அளவிலான பயிற்சி | பணி மற்றும் புத்தாக்கப்பயிற்சி | அங்கன்வாடி பணியாளர்கள் |
| 5. | | பணிப் பயிற்சி/புத்தறிவுப் பயிற்சி மற்றும் புத்தாக்கப்பயிற்சி | அங்கன்வாடி உதவியாளர்கள் |

மேற்கண்ட வழக்கமான பயிற்சிகள் தவிர “பிற பயிற்சி” என்கிற பிரிவின் கீழ் மாநில அளவில் தேவைக்கேற்ப குறிப்பிட்ட தலைப்புகளில், பயிற்சித் திட்டங்களைக் கண்டறிந்து, வடிவமைத்து பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. திட்டப்பகுதிகளில் சூழ்நிலைக்கேற்ப புதிய முயற்சிகளை கையாளுதல், வாழ்க்கை–வேலை இரண்டிற்கும் இடையே சமநிலையை உறுதி செய்தல் போன்றவற்றில் திறன்

மிக்கவர்களாக களப்பணியாளர்களை உருவாக்கிட உளவியல் முன்னேற்றம், மனஅழுத்தத்தைக் கையாளுதல், யோகா போன்ற பயிற்சிகள் களப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, மாநில அளவில் முறையான பயிற்சி திட்டங்களின் கீழ் வழங்கப்படும் பயிற்சி பாடத்திட்டத்தில் 25% தேவைக்கேற்ப மாற்றம் செய்து கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளதால், அதிக கவனம் தேவைப்படும் முக்கியத்துவம் நிறைந்த, புதிய பாடத் தலைப்புகளும் பயிற்சியின் போது, பரிசீலிக்கப்பட்டு, பயிற்சி வழங்கப்படுகிறது.

சமுதாயத்தில் குழந்தைப் பராமரிப்பு முறைகளை அவர்களின் பங்களிப்புடன் மேம்படுத்துதல், பிறதுறையினருடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல் போன்றவற்றில் களப்பணியாளர்களின் செயல்திறன்களைப் பொறுத்தே, திட்டத்தின் நோக்கமும்/இலக்குகளும் அடைய வேண்டிய சாதனைகளை எளிதில் அடையும் என்பதால், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் பயிற்சி என்பது மிகவும் முக்கியமான பிரிவாக உள்ளது.

**2017–2018ஆம் ஆண்டில் ₹3.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.15 தகவல், கல்வி , தொடர்பு மற்றும் விழிப்புணர்வு பணிகள்**

வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பராமரிப்பு, சரியான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பழக்க வழக்கங்கள் போன்றவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் சமுதாயப் பங்கேற்பை அதிகப்படுத்தவும் பல்வேறு தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

‘‘சமுதாய வளைகாப்பு’’, ‘‘பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள், ஊட்டச்சத்து வார விழா, தாய்ப்பால் வார விழா, வானொலி மற்றும் தொலைக்காட்சியில் திட்டம் பற்றி விளம்பரப்படுத்துதல் போன்ற பல்வேறான தகவல் தொடர்புப் பணிகள் திட்டமிடப்பட்டு, கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான கவனம், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் தொடர்பான பழக்கவழக்கங்களில் சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்க செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தை வளர்ச்சி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான சுவரொட்டி, தொங்கும் அட்டைகள், புத்தகங்கள் போன்ற பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்கள் அச்சிடப்பட்டு அனைத்து அங்கன்வாடி

மையங்களுக்கும், சுகாதார நிலையங்களுக்கும், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

திட்டம் குறித்த புதியத் தகவல்கள் மக்களையும் பணியாளர்களையும் சென்றடைய **“சிட்டுக்குருவி சேதி தெரியுமா ?”** என்ற இதழ் இருமாதங்களுக்கொருமுறை அச்சிடப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

‘‘பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்’’ குறித்து பல்வேறான தகவல் தொடர்பு முனைப்பு இயக்கங்கள் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் நடத்தப்பட உள்ளன.

**2017–2018 ஆம் ஆண்டிற்கு தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகளுக்கென ₹7.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.16 கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்**

திட்டம் தொடர்பான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை என்பது அத்திட்டம் சிறந்த முறையில் செயல்படுவதற்கு மிகவும் அவசியமானதாக கருதப்படுகிறது. இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி திட்டத்தின் அளவிடப்பட்ட உள்ளீடுகள், செயல்பாடுகள், வெளியீடுகள் மற்றும்

விளைவுகளைக் கண்காணிக்கவும், மேம்படுத்தவும் மாநில, மாவட்ட, வட்டார மற்றும் மத்திய அளவில் துணைபுரியவும், உதவி அளிக்க கூடிய வகையில் கண்காணிப்பு அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

**2017–2018ஆம் ஆண்டிற்கு கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் பணிகளுக்கென ₹5.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.17 அங்கன்வாடி மைய ஊழியர்களின் நலன்**

தமிழகத்தில் உள்ள **54,439** அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்படுகிறது. இது தவிர அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி மற்றும் ஆண்டொன்றிற்கு **3** சதவீதம் ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, ஒட்டுமொத்த ஓய்வுத் தொகையாக முதன்மை மற்றும் குறு அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு **₹60,000**மும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு **₹25,000**மும் **01.02.2016** முதல் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் சிறப்பு ஓய்வூதியமாக மாதந்தோறும் **₹1,500** **01.02.2016** முதல் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும்

அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரண்டு புடவைகள் சீருடையாக வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் சிறப்பாக பணிபுரியும் 98 அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாநில விருதாக தலா ₹5,000 ரொக்கப்பரிசும், பாராட்டுச்சான்றிதழும் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட குழுமம், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத்தில் பலவீனமான குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான ஒரு நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் சமுதாயத்தில் சுகாதாரம் மற்றும் கல்வியறிவை மேம்பட செய்கிறது. இந்த குழுமம் இலக்கை எய்துகையில் முன்னேற்றமடையும் சமுதாயத்தை உருவாக்கி அதன் மூலம் மாநிலத்தின் சமூக பொருளாதாரக் குறியீட்டினை உயர்த்தும் என்பது திண்ணம்.

**********

## அத்தியாயம் – 7

# சமூகப் பாதுகாப்பு

**7.1** குழந்தை உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைக்கேற்ப, குழந்தை நேய அணுகுமுறையுடன் குழந்தைகளின் அடிப்படை தேவைகள், வளர்ச்சி மற்றும் சமூக ஒன்றிணைப்புடன் குழந்தைகள் பராமரிக்க மற்றும் பாதுகாக்கப்பட வேண்டுமென 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் அதிகபட்ச வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்ய, சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்த உறுதிகொண்டுள்ளதால், சமூகத்தில் குழந்தைகள் தற்போது பாதுகாப்பான சூழ்நிலையில் உள்ளனர்.

துயருறும் சூழலில் உள்ள சிறார்கள் மற்றும் பெண்களுக்கு சேவை புரிவதிலும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் புதுமையான திட்டங்களை உருவாக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தங்குமிடமில்லாத, ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் காணாமல் போன குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1887 ஆம் ஆண்டில், சீர்திருத்தப்பள்ளி ஒன்று செங்கல்பட்டில் துவங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சிறார்களின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும்

குழந்தைகளுக்கான நிறுவனங்களை நிர்வகிப்பதற்காக 1920ஆம் ஆண்டில், 'மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்' இயற்றப்பட்டது. இதன் மூலம், இந்தியாவிலேயே சிறார்களுக்கென தனிச் சட்டம் இயற்றிய முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

குழந்தைப் பாதுகாப்பு மற்றும் துயருறும் சூழலிலுள்ள பெண்களின் நலன் குறித்து சமூகப் பாதுகாப்புத் துறை மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இதற்கென, 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மற்றும் 1956 ஆம் ஆண்டின் பெண்களுக்கான, ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம் ஆகிய இரு முக்கிய சட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களான வரவேற்பு இல்லங்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்கள் ஆகியவை அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவை அரசால் மட்டுமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. குழந்தைப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திட மாநில

மற்றும் மாவட்ட அளவில் போதுமான கட்டமைப்புகளைக் கொண்டு ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தினையும் இத்துறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. 1956ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் இத்துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**7.2 2015–ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்**

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோருக்காகச் செயற்திறனுள்ள சட்ட விதிகளை ஏற்படுத்தி செயல்படுத்துவதை 2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் வழிவகை செய்கிறது. பின்வரும் இரண்டு வகையான குழந்தைகளுக்கு தனித்தனியான நெறிமுறைகளை இச்சட்டம் வகுத்துள்ளது:-

1. பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்.
2. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்.

## 7.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்

பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் இல்லாத, உற்றார் உறவினர் எவரும் இல்லாத, எந்தவொரு வசிப்பிடமோ, வாழ்வாதாரமோ இல்லாத குழந்தைகள், தெருவோர குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்கள், கொடுமைப்படுத்தப்பட்ட சுரண்டலுக்குள்ளான, எளிதில் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய குழந்தைகள், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் பிரிவின் கீழ் அடங்குவர்.

### 7.3.1 குழந்தை நலக் குழுக்கள்

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கு தமிழக அரசு மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் குழந்தை நலக் குழுக்களை நிறுவியுள்ளது. 1973ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஆகியோரின் அமர்வுக்கு உள்ள அதிகாரத்துடன் குழந்தை நலக் குழுக்களும் ஓர் அமர்வாக செயல்பட்டு வருகின்றன. குழந்தை நலக் குழுவின் நடைமுறைகள் குழந்தைகளின் அதிகபட்ச நலனை முன்னிட்டு குழந்தை நேய சூழலுடன் நடத்தப்பட்டு வருகிறது.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹490.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7.3.2 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்**

சமூக நல இயக்குநரகம் மற்றும் சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தின் கீழ் செயல்பட்டு வந்த குழந்தைகள் இல்லங்கள் செம்மையாக நிர்வகிக்கப்படவும் சிறந்த சேவை அளிக்கவும் ஒன்றிணைக்கப்பட்டு தற்போது சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. தற்போது, 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், 142 குழந்தைகள் இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் அரசின் நிதி உதவியுடனும் இயங்கி வருகின்றன. இதில் மன நலம் குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 5 இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இக்குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக உணவு, உடை, உறைவிடம், மருத்துவ உதவி, கல்வி, தொழிற்கல்வி போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு குழந்தைகள் இல்லங்கள் மற்றும் அரசின் நிதி உதவியுடன் செயல்படும் குழந்தைகள் இல்லங்களுக்காக ₹10,727.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.3.3 நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் பராமரிப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளிப் புகலிடங்கள்

வசிப்பிடமில்லாச் சிறார்கள், சாலையோரத்தில் வசிக்கும் சிறார்கள், உழைக்கும் சிறார்கள், மது மற்றும் போதை பழக்கத்திற்கு ஆளான சிறார்கள், பிச்சையெடுக்கும் சிறார்கள் போன்ற சுரண்டலுக்கும் ஆபத்திற்கும் உள்ளாகக்கூடிய சிறார்களுக்கு என தங்குமிட வசதி வழங்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் 13 திறந்தவெளிப் புகலிடங்கள் (சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தலா ஒன்று மற்றும் சென்னையில் 9 இடங்கள்) நகரங்களிலும், புறநகரங்களிலும் செயல்பட்டு வருகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் ₹2,000 வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**2017–2018ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹265.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 7.4 சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் நாளன்று, பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணானச் செயல்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகள் 'சட்டத்துக்கு முரணாகச் செயல்பட்ட குழந்தைகள்' எனப்படுவர்.

### 7.4.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளை இளைஞர் நீதிக்குழுமங்கள் தீர்வு செய்து வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இளைஞர் நீதிக் குழுமம் இருக்கும் வகையில் தமிழக அரசு மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் இளைஞர் நீதிக் குழுமங்களை நிறுவியுள்ளது. இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியில் அனுபவமுள்ள உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர்) ஆகியோரைக் கொண்டு செயல்படுகிறது. இளைஞர் நீதிக் குழும நடைமுறைகளும் குழந்தை நலக் குழு நடைமுறைகள் போன்றே ஒரு நீதிமன்றம் நடப்பது போன்ற தோற்றம் இல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தைநேய சூழலுடன் நடத்தப்படுகிறது.

இக்குழுமங்கள், திங்கள் முதல் வெள்ளி வரை மாதத்திற்கு 20 அமர்வுகளுக்கு மிகைப்படாமல் கூடுகின்றன.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹254.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.4.2 கூர்நோக்கு இல்லங்கள்

சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்களின் விசாரணை இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் மேற்கொள்ளப்படும் காலங்களில் தற்காலிகமாக தங்கவைப்பதற்காக அமைக்கப்பட்டவையே கூர்நோக்கு இல்லங்கள் ஆகும். தமிழ்நாட்டில் தற்போது அரசால் 9 கூர்நோக்கு இல்லங்கள் நேரடியாக நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மதுரையில் உள்ள அரசு கூர்நோக்கு இல்லத்தில் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இவ்வில்லங்களில் உறையும் சிறார்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி மற்றும் முறைசாராக் கல்வி ஆகியவற்றோடு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதலும் வழங்கப்படுகின்றன. மேலும், இக்குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் அவர்களை உன்னிப்பாக கண்காணிப்புச் செய்வதற்கு ஏதுவாகவும் 7 அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக்

கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வில்லச் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் ஆற்றுப்படுத்தும் சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹502.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.4.3 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

இளைஞர் நீதிக் குழுமத்தில் உரிய சட்ட விதிகளின்படி, விசாரணைக்குப் பின் குற்றம் உறுதி செய்யப்பட்ட சிறார்கள் மறுவாழ்விற்காக சிறப்பு இல்லங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இச்சிறார்கள் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்கலாம். சிறுமியர்களுக்காக சென்னையில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும், சிறுவர்களுக்காக செங்கல்பட்டில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும் இயங்கி வருகின்றன. இவர்களது சுயசார்பிற்கான திறன்களை வளர்க்கவும், இவர்களுக்கு, இவ்வில்லங்களில் கல்வி, தொழிற்கல்வி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணைக் கல்வி செயல்பாடுகள், போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் உன்னிப்பாக கண்காணிக்கவும், அரசினர் சிறப்பு இல்லங்களுக்கு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு

உபகரணங்களும், தடையில்லா மின்சேவை அளிக்க 100 KVA திறன் கொண்ட தானியங்கி டீசல் மின்னாக்கியும் வழங்கப்பட்டுள்ளன.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹253.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7.4.4 வள மையங்கள்**

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகளின் வழக்குகள் முறையே குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களில் விசாரணைகுள்ளாகும் போது அக்குழந்தைகளுக்கு சமூக உளவியல் ரீதியான உதவிகளும், வழிகாட்டுதல்களையும் வழங்குவதற்காக வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கண்காணிப்பாளர் மூலம் பரிந்துரைக்கப்படும், நிறுவனங்களில் உறையும் சிறார்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களின் உளவியல் ரீதியான தேவைகளையும் இவ்வளமையங்கள் பூர்த்தி செய்கின்றன. தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசு நிதியுதவியுடன் இவ்வள மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹8.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.4.5 குழந்தைகளுக்கான உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதல் சேவை

இளைஞர் நீதிக் குழுமம் மூலம் குற்றம் இழைத்ததாகக் கருதப்பட்டு பிணையில் விடுவிக்காத நிலையில் கூர்நோக்கு இல்லங்களில் அனுமதிக்கப்படும் சிறார்கள் மற்றும் அதே போன்று குற்றச் செயல்கள் உறுதி செய்யப்பட்டு, குடிப்பழக்கத்திலிருந்து விலகியதன் தாக்கத்தால் சிறப்பு இல்லங்களில் அனுமதிக்கப்படும் சிறார்கள் அவ்வப்போது உளவியல் ரீதியான உணர்வுப் பூர்வமான மற்றும் ஆக்ரோஷமான விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்விதமான உளவியல் தாக்கத்திலிருந்து விடுபடவும் நிறுவன சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்பட அவர்களுக்கு உதவும் பொருட்டு இவ்வில்லச் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் ஆற்றுப்படுத்தல் சேவை வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக உளவியல் நிபுணர்கள் மூலம் ஒரு நாளைக்கு ஒரு உளவியலாளருக்கு **₹1000/–** மதிப்பூதியத்தில் குழந்தைகளுக்கு வருடத்தில் **180** நாட்களுக்கு ஆற்றுபடுத்துல் சேவை வழங்கப்படுகிறது.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹16.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7.4.6 சென்னை அரசு கூர்நோக்கு இல்லத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

சென்னையில் இயங்கி வரும் அரசு கூர்நோக்கு இல்லம் தற்போது பழைய கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் குழந்தைகளின் தற்கால தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இக்கட்டடம் பொருத்தமானதாக இல்லை. எனவே, இல்லங்களில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பினை வசதியான இருப்பிடத்துடன் மேம்படுத்த புதிய கட்டடம் கட்டுவதற்காக **₹250.00** இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

**7.4.7 சென்னை, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் வரவேற்பு இல்லத்திற்காக புதிய கட்டடம் கட்டுதல்**

சென்னையில் இயங்கி வரும் அரசினர் குழந்தைகள் இல்லம் தற்போது பழைய கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் குழந்தைகளின் தற்கால தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இக்கட்டடம் பொருத்தமானதாக இல்லை. மேலும், சென்னை

பெருமாநகரமாக உள்ளதால் பல்வேறு மாநிலங்களிலிருந்து அதிக அளவில் மக்கள் இடம்பெயர்கின்றனர். குழந்தை நலக் குழு புலனாய்வு செய்து இச்சிறார்களை தத்தம் மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு போதிய காலஅவகாசம் தேவைப்படுவதால் இக்காலக்கட்டத்தில் இச்சிறார்களைப் பாதுகாப்பாக தங்க வைப்பது தவிர்க்க இயலாத தேவையாக உள்ளது. எனவே, கூடுதல் தங்கும் வசதிக்காகவும், பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பனை மேம்படுத்தவும் அரசு ₹100.00 இலட்சம் செலவில் வரவேற்பு இல்லத்திற்காக புதிய கட்டடம் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**7.4.8 பாதுகாப்பான இடம்**

16 வயது மற்றும் 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகள் மற்றும் 18 வயதிற்கு முன் செய்த குற்றத்திற்காக 18 வயது பூர்த்தி அடைந்த பின் விசாரணைக்கு உட்படுத்தப்படுபவர்களைத் தங்க வைப்பதற்காக பாதுகாப்பான இடம் நிறுவப்பட வேண்டும் என 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் வலியுறுத்துகிறது. எனவே, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய விரிவான மறுவாழ்வுத் திட்டம் இப்பாதுகாப்பான இடத்திற்கு தேவை என்பது அவசியமாகிறது. வேலூரில் செயல்பட்டு வந்த வரவேற்பு இல்ல கட்டடத்தை

பழுதுபார்த்து, சீரமைத்து மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்கு ₹42.00 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. பணி முடியும் நிலையில் உள்ளது.

### 7.4.9 இளைஞர் நீதி நிதி

2015–ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் படி, குழந்தைகள் நலன் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி ₹25.00 இலட்சம் குழும நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி அவசர தேவைகள் மற்றும் துறையின் திட்டத்தின் கீழ் வராத ஏனைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது.

### 7.4.10 அரசினர் பிற்காப்பு நிறுவனங்கள்

குழந்தைகள் இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் மறுவாழ்விற்கான திட்டங்களை முடித்த பின், சிறார்களின் 18 வயது முடிவுற்ற பின், 21 வயது நிறைவெய்தும் வரை நிறுவன பராமரிப்புத் தேவைப்படின், அத்தகைய இளைஞர்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். பிற்காப்பு இல்லங்களில் பல்வேறு காரணங்களால் தன் குடும்பத்துடன் மீண்டும் சேர முடியாத இளைஞர்கள் அல்லது கல்வியைத் தொடரும் குழந்தைகள் அல்லது பயிற்சியை எடுத்துக்

கொண்டிருக்கும் குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர். இளைஞர்களுக்கான இரண்டு பிற்காப்பு நிறுவனங்கள் ஒன்று ஆத்தூர், செங்கல்பட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றொன்று மதுரையிலும் இயங்கி வருகின்றன. பெண்களுக்காக வேலூரில் ஒரு பிற்காப்பு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இது தவிர வயது முதிர்ந்த மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு தொழிற்பயிற்சியுடன் கூடிய புகலிடம் அரசு உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகிறது.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹242.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.4.11 பள்ளிக் குழந்தைகளுக்கான தற்கொலைத் தடுப்புத் திட்டம்

குழந்தைகள் குறிப்பாக தங்களது பள்ளி இறுதி தேர்வின் முடிவுகாலங்களில் பல்வேறுவிதமான மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலை எண்ணத்திற்கு உந்தப்படுவதை தவிர்த்திடும் பொருட்டு பள்ளிகளில் தற்கொலைத் தடுப்பு திட்டங்களை ₹15.04 இலட்சம் செலவில் துறை நடத்தியுள்ளது. இத்திட்டத்தினை உரிய கால இடைவெளிகளில் தொடர் திட்டமாக செயல்படுத்த ஏதுவாக, ஒவ்வொரு மாவட்டத்திலும்

பள்ளிகளில் உள்ள 100 ஆசிரியர்களுக்கு 'பயிற்றுனர்களுக்கான பயிற்று திட்டங்களை' அதற்கென நிபுணத்துவம் வாய்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### 7.4.12 குழந்தைகள் தத்தெடுத்தல் திட்டம்.

'தத்தெடுத்தல்' என்பது பெற்றோர்களிடமிருத்து நிரந்தரமாக பிரிய நேரிட்ட ஒரு குழந்தை வளர்ப்பு பெற்றோர் என்று அழைக்கப்படும் பெற்றோரின் உறவு முறையோடு இணைந்து அனைத்து தார்மீக உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளோடு அவர்களது சட்டபூர்வமான குழந்தையாக மாறும் செயல்முறையை குறிப்பதாகும்.

நிராதரவான, கைவிடப்பட்ட, ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்கு குடும்பச் சூழ்நிலையிலான கவனிப்பு மற்றும் பாதுகாப்பினை நல்கி, அவர்களது அறிவாற்றலையும், செயலாற்றலையும், வெளிக்கொணரும் வகையில் மகிழ்ச்சி, அன்பு மற்றும் புரிந்துக் கொள்ளும் சூழலை தத்தெடுத்தல் திட்டம் ஏற்படுத்தி தருகிறது. குழந்தைகளின் உணர்வு பூர்வமான, உடல் மற்றும் பொருள் ரீதியான பாதுகாப்பினை அளிக்கிறது. மேலும் குழந்தையின்றி தவிக்கும் தம்பதியருக்கு தங்களுக்கே உரிமையான ஒரு

குழந்தையை சொந்தமாக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பினையும் மகிழ்ச்சியினையும் முழு திருப்தியினையும் உருவாக்கி தருகிறது.

அரசியலமைப்பின் உரிமைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்வதற்கான உரிமை, கல்விக்கான உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை வேண்டும். இவ்வுரிமைகள் நிறைவேற்றும் பொருட்டு, அரசு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழங்கிட பல முயற்சிகள் எடுத்து வருகின்றது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில், மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் மத்திய தத்துவள ஆதார மையம் (CARA) தன்னாட்சி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது. மாநில அளவில் உள்நாட்டு தத்தெடுத்தல் மற்றும் வெளிநாட்டு தத்தெடுத்தலை கண்காணிப்பதற்கு மாநில தத்துவள ஆதார மையம் (SARA) நிறுவப்பட்டுள்ளது.

குழந்தைகளின் நலன் கருதி நல்ல சூழலை அளித்திடும் வகையில் இளைஞர் நீதிச் சட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் இந்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இளைஞர் நீதிச் சட்டம் 2015ன் கீழ் ஆதரவற்ற, கைவிடப்பட்ட அல்லது ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு மற்றும் சமூக இணக்கத்துடன் வாழ்வளிப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இளைஞர் நீதிச் சட்டம், 2015ல்

தேவையான பாதுகாப்புகளுடன் குழந்தைகளை தத்து வழங்கும்போது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் உள்நாடு மற்றும் வெளிநாட்டிற்கு தத்து வழங்குவதற்காக பல்வேறு நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

**சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள்**

தமிழ்நாட்டில் உள் மற்றும் வெளிநாட்டில் தத்து வழங்கிட 17 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. மேற்படி, நிறுவனங்கள் முறையே சென்னை (2), சேலம் (2), மதுரை (2), காஞ்சிபுரம் (3) மற்றும் கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், திருநெல்வேலி, நாமக்கல் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றுமாக அமைந்துள்ளன.

தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் பெறப்படும் குழந்தைகள் மட்டுமல்லாது, குழந்தைகள் வழிமம் (சைல்டு லைன்), காவல் துறை, பொதுமக்கள், மருத்துவமனைகள் மற்றும் பெற்றோர்கள் நேரடியாக ஒப்படைப்பு ஆகிய பல்வேறு வழிகளிலும் பெறப்படும் குழந்தைகளை மத்திய தத்து வள ஆதார மைய வழிகாட்டுதலின்படி தத்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் துவங்கப்பட்ட காலம் முதல் மார்ச் 2017 வரை தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விபரம்.

| வ. எண் | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | ஆண் குழந்தைகள் | பெண் குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | உள்நாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | 1178 | 3689 | 4867 |
| 2 | வெளிநாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | 90 | 354 | 444 |
| **மொத்தம்** | | **1268** | **4043** | **5311** |

உள்நாடு மற்றும் வெளிநாட்டு தத்தெடுப்பை மேம்படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில தத்தெடுப்பு ஆலோசனை குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின்வரும் சட்டங்களின்படி, குழந்தைகள் சட்டப்பூர்வமாக உரிய நீதிமன்றங்களால் தத்து அளிக்கப்படுகின்றனர்:-

1. இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956 (HAMA)
2. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.

தத்தெடுப்பு திட்டமானது வெளிப்படையாகவும் புதிய வழிமுறைகளின்படி தேசிய தகவல் மையத்தின் மூலம் ஆகஸ்ட் 2015–லிருந்து பதிவு செய்தல், குழந்தைகளின் விவரம் மற்றும்

நிறுவனங்களின் விவரம் ஆகியவை இணையதளம் வழியாக செய்யப்பட வேண்டும். மேலும் www.cara.nic.in வலைதளத்தில் படிவம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 7.4.13 திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

குழந்தைகள் நலத் திட்டங்களைக் (அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்) கண்காணிக்க யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் **1991** ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநரகத்தில் திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதோடு, அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இல்லங்கள் அனைத்தையும் இப்பிரிவு ஆய்வு செய்து வருகிறது. குழந்தைகள் நலத் திட்டங்களைக் காலமுறையாக ஆய்வு செய்து அறிக்கையினை வளர்ச்சிக்கான காரணிகளுடன் தெரிவிப்பது, இப்பிரிவின் கடமையாகும். தற்போது இப்பிரிவிற்கான செலவினம் முழுவதும் மாநில வரவு செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

## 7.4.14 அரசால் மேற்கொள்ளப்பட்ட பிறவகையிலான நடவடிக்கைகள்

### 7.4.14.1 கட்டமைப்பு வசதிகள்

மதுரையிலுள்ள சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறுமியருக்கான கூர்நோக்கு இல்லம் ஆகியவற்றிற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கும் மேலும் அவ்வளாகத்திலுள்ள கட்டடத்தைப் புதுப்பித்து அலுவலகமாகவும் மற்றும் இளைஞர் நீதிக் குழும அலுவலகமாகவும் மாற்றுவதற்கு அரசால் **₹6.04** கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 7.5 கல்வி வசதிகள்

அரசு குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள், குழந்தைகள் தன்னுரிமை மிக்கவர்களாக்க, அவர்களுக்கு கல்வி அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. மேல்படிப்பு படிப்பதற்கு விருப்பம் உள்ள குழந்தைகள் கல்வியைத் தொடர்வதற்காக வெளியிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தொழிற்கல்வியில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

முறையான கல்வி வழங்குவதற்காக பெரும்பாலான குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள்

அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களான கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் முறைசாராக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹4.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7.6 நவீன தொழிற் பயிற்சி**

துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் பயிற்சிபெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர் மூலம் தையல், மரவேலை மற்றும் புத்தகம் கட்டுதல் போன்ற திறன் அடிப்படையிலான தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவை தவிர தனியார் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கீழ்க்காணும் குறுகிய கால தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:–

- ஹேண்டி மேன்–பிளம்பிங் / எலக்ட்ரிக்கல் / தச்சு
- வீடியோகிராபி /புகைப்படம் எடுத்தல்
- ஆடை தயாரித்தல்/ எம்பிராய்டரி தையல்
- பேப்ரிக் பெயிண்டிங் / புத்தகம் கட்டுதல்

- கைவினைப் பொருட்கள் / கலைப் பொருட்கள் தயாரித்தல் / வண்ணம் தீட்டுதல்
- மென்பொம்மைகள் / காகிதப்பை / தட்டுகள் தயாரித்தல் / செயற்கை நகைகள் தயாரித்தல் / துணி மற்றும் சுவர்களில் வர்ணம் தீட்டுதல்
- கணினி DTP பயிற்சி / உருப்படம் எடுத்தல்
- அழகுக்கலை பயிற்சி / மருதாணி இடுதல்
- உணவு பதப்படுத்தல்

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹79.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 7.7 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Child line) 1098

துன்புறும் சூழலில் உள்ள குழந்தைகள் மற்றும் உடனடியாக உதவி தேவைப்படும் குழந்தைகள் அல்லது அவ்வகையான குழந்தைகளைக் காண நேரிடும் நபர், உடனடி உதவி பெற **1996** ஆம் ஆண்டு **சைல்ட் லைன் இந்தியா பவுண்டேசன்** என்ற அமைப்பினால், **(Childline India Foundation),** துவங்கப்பட்ட '**சைல்ட் லைன் –** என்ற கட்டணமில்லா தொலைபேசி உதவி திட்டத்தின் மூலம் **24** மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். நாடு முழுவதும்

இத்தொலைபேசி சேவைக்கான பொது எண்ணாக **‘பத்து ஒன்பது எட்டு’ (1098)** உள்ளது. இச்சேவை, தனியார் தொண்டு நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், இதற்கான நிதியுதவி இந்திய அரசினால் வழங்கப்படுகிறது. இத்தொண்டு நிறுவனங்கள் மீட்பு மற்றும் தலையீட்டுச் சேவைகளை அளித்து வருகின்றன. தமிழ்நாட்டில், சிவகங்கை, நாமக்கல் மற்றும் வேலூர் மாவட்டங்களைத் தவிர்த்து இத்தொலைபேசி சேவை அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

## 7.8 ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

குழந்தைப் பாதுகாப்பிற்காக மாநிலத்தில் இளைஞர் நீதி நிர்வாகத்தினை சிறப்பாக மேம்படுத்துவதற்கு மைய அரசின் நிதியுதவியுடன், ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை அரசு மற்றும் பொது மக்களின் பங்களிப்போடு ஏற்படுத்த ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் முனைந்துள்ளது.

### குறிக்கோள்கள்

இத்திட்டம் இளைஞர் நீதிச் சட்டத்தினைச் செம்மையாகச் செயல்படுத்துவதையும், துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளின் நலனுக்காகப் பங்களித்தலையும், சமுதாயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்

ஆகியவற்றோடல்லாமல், குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, சுரண்டல், புறக்கணித்தல், கைவிடப்படுதல் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பிரிதல், போன்றவற்றை ஏற்படுத்தக் கூடிய துன்பச் சூழல்களைத் திறம்பட குறைத்து, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேற்கூறிய நோக்கத்தை அடைய கீழ்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:–

- குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.
- இந்தியாவில் தற்போது நிலவும் குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பிற்கான கடமையையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல் மேலாண்மைத் திட்டம், காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் மற்றும் குழந்தைப் பாதுகாப்புச் சேவை கண்காணிப்பு ஆகியவற்றை உருவாக்குதல்.
- அனைத்து பிரிவுகளுக்கிடையே எல்லா அளவிலும் தகுந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துதல்.

### 7.8.1 ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல்படும் சேவை அளிக்க கூடிய கட்டமைப்புகள்

ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்காணும் சேவை அளிக்கக்

கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:-

1. மாநிலக் குழந்தைப் பாதுகாப்புச் சங்கம்
2. மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு சங்கங்கள் / அலகுகள்
3. மாநிலத் தத்தெடுப்பு வள முகமை

அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் சைல்ட் லைன் திட்டம் போன்றவற்றால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோர் நேரடியாக பயனடைகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வாயிலாக சமூகத்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர்.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹2,240.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.8.2 அனைத்து குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களையும் 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களும் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யப்படாமலிருந்தால் சட்டப்படி அதற்கான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லங்களைப் பதிவு செய்வதன் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து இல்லங்களின் உண்மையான நிலை, அடிப்படை வசதிகள், போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதற்கு உதவிகரமாக உள்ளது.

மேலும் மாநிலத்திலுள்ள அனைத்து குழந்தைகளின் விவரங்களைப் பெற்று, குழந்தைப் பராமரிப்பு இல்லங்களிடையான சேவைகளை ஒருங்கிணைக்க இல்லங்களைப் பதிவு செய்தல் உதவுகிறது. இதுவரை 1,096 இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் 841 இல்லங்கள் போதிய கட்டமைப்பு வசதி இல்லாததால் மூடப்பட்டுள்ளன.

### 7.9 குழந்தைகளின் பின்தொடர் முறைமை

காணாமல் போன குழந்தைகள், வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகள் மற்றும் கடத்தப்படும் குழந்தைகள்,

சுரண்டல்கள் மற்றும் பல்வேறு பாலியல் / உடல் ரீதியான கொடுமை மற்றும் மனித உரிமை மீறல் போன்ற சூழல்களுக்கு எளிதாக இலக்காகக் கூடிய இவ்வகையான குழந்தைகளை முன் கூட்டியே கண்டறிந்து அவர்களைக் குடும்பத்துடன் சேர்ப்பதே, அவர்களது வாழ்க்கையை மீண்டும் பெறுவதற்கும் பாதுகாப்பு வழங்குவதற்குமான சிறந்த தலையீட்டு சேவையாகும். காணாமல் போன குழந்தைகளின் பின் தொடர் முறைமை என்ற தேசிய இணையத்தினை காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிப்பதற்காக மத்திய அரசு தேசிய தகவல் மையம் (NIC) மூலம் அமைத்துள்ளது. மேற்படி தேசிய இணையத்தின் மூலம் காணாமல் போன குழந்தைகளைக் கண்டறியவும் நிறுவனங்களிலுள்ள குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கவும் நேரலை தகவல் தொகுப்பு பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் ‘‘குழந்தைப் பின்தொடர் முறைமை’’ சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணினி இணைப்பின் மூலம் மாநிலத்தின் உள்ளார்ந்த பகுதிகளில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்கள், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலகங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே இணைப்பை ஏற்படுத்தியதன் மூலமும்,

பங்களிப்பினருக்கும், பணியாளர்களுக்கும் காலமுறையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டதின் மூலமும் இது சாத்தியமாகியுள்ளது. காணாமல் போன குழந்தைகளின் பின்தொடர் முறைமையின் கீழ், தேசிய தகவல் தளத்தில் தகவல்களைப் பதிவு செய்வதற்கான மென்பொருள்களை உபயோகப்படுத்துதல் குறித்துப் பயிற்சி திட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை வகுத்துப் பயிற்சி வழங்கியுள்ளது.

## 7.10 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம்

### 7.10.1 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் நோக்கமும் குறிக்கோள்களும்

i. பெண்கள் மற்றும் சிறுமியர்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதைத் தடுத்தல்

ii. ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்கள், பாலியல் தொழிலில் அவர்களை ஈடுபடுத்துபவர்கள் மற்றும் பாலியல் தொழில் சந்தையை ஏற்படுத்துபவர்களை நீதியின் முன் நிறுத்துதல்.

iii. பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பெண்கள், சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

### 7.10.2 மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

**1956**–ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள, சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும்

திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை தமிழக அரசு நடத்தி வருகிறது.

ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட பெண்கள் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ், நீதிமன்ற ஆணையின்படி இவ்வில்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இங்கு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் அடிப்படை வசதிகளான பராமரிப்பு, மருத்துவ உதவி மற்றும் ஆற்றுப்படுத்துதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மீண்டும் சமுதாயத்தில் மதிப்புடன் வாழ வழி ஏற்படுத்த அவர்களின் விருப்பதிற்கேற்ப பல்வேறு தொழிற்பயிற்சிகள் இவ்வில்லங்களில் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்களின் மாண்பை பாதுகாக்கவும், பாலியல் குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளைப் பாதுகாக்கவும் ஏதுவாக நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு பதிலாக காணொலி ஒளிக்காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ள ஏதுவாக ₹20.00 இலட்ச செலவில் மயிலாப்பூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கும், சைதாப்பேட்டை முதன்மை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே, காணொலி ஒளிக்காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் வழக்குகள் விரைவில் தீர்வு செய்யப்படுகின்றன.

**7.10.3 மீட்புப் புகலிடங்கள்**

**1956** ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் மீட்கப்பட்ட சிறுமியர் மற்றும் மகளிருக்காக **6** மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதிமன்றத்தால் வழக்குகள் முடிக்கப்படும் வரை, பாதிக்கப்பட்ட பெண்கள் தற்காலிகமாக இங்கு தங்க வைக்கப்படுகின்றனர். இந்தப் புகலிடங்கள், பெண்கள் கண்காணிப்பு / பாதுகாப்பு இல்ல வளாகத்திலும், வேலூர், பிற்காப்பு நிறுவனத்திலும் இயங்கி வருகின்றன.

**7.10.4 மணமாகாத தாய்மார்கள் இல்லம்**

பாலியல் சுரண்டல்களுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட மணமாகாத தாய்மார்களின் நலனுக்காக சென்னை, மைலாப்பூர் அரசினர் மகளிர் காப்பகத்துடன் இணைக்கப்பட்ட, மணமாகாத தாய்மார்கள் இல்லம் இயங்கி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அடைக்கலாபுரத்தில் ஒரு மணமாகாத தாய்மார்கள் இல்லம் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகிறது.

**2017–2018 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹502.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.11 மறுவாழ்வுக்கான திட்டங்கள்

தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் நலனுக்காக மாநில அரசு பல்வேறு மறுவாழ்வு நடவடிக்கைகளையும், நலத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. அத்தகைய ஒரு நடவடிக்கையாக, தமிழக அரசு, 'பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி' ஒன்றை இத்துறையின் கீழ் உருவாக்கியுள்ளது. இல்லங்களிலுள்ள வசதிகளை மேம்படுத்துதல், ஆதரவற்ற குழந்தைகளுக்கான கல்வி உதவி போன்ற செலவினங்களை மேற்கொள்வதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்கள் தொழில் தொடங்க ₹5,000 வரையிலான நிதியுதவி அல்லது தேவையான கருவிகள், மூலப்பொருட்கள் வாங்க ₹10,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.

தச்சு வேலை, நெசவு, புத்தகம் கட்டுதல், தோட்ட வேலை, கட்டட வேலை, தையல், பூ தையல், பாய் நெசவு, குழாய் வேலை போன்ற தொழிற் பயிற்சிகள் சிறுவர் சிறுமியர்களுக்கு அளிக்கப்படுகின்றன. அதே போன்று, கண்காணிப்பு / பாதுகாப்பு இல்லங்களிலிருந்து வெளியேறும் பெண்கள் மற்றும் சிறுமிகள் சுய தொழில் தொடங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### 7.11.1 வணிக ரீதியிலான பாலியல் சுரண்டலுக்காக மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுத்துவதைத் தடுக்க மாநில அரசின் சிறப்பு முயற்சிகள்

கடத்தப்படுதல் மற்றும் வணிகரீதியிலான பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக தமிழக அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:–

- மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச்செயலரின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு கிராமங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவது தொடர்பான பிரச்சனைகளைக் கண்காணிக்க கிராம ஊராட்சி தலைவர் தலைமையில் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடுப்பதற்காக இம்மூன்றடுக்கு திட்டம், தோற்றுவிக்கப்பட்டதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது.
- மேற்குறிப்பிட்ட குழுக்கள் மட்டுமல்லாது மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட மேற்பார்வைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் / வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை மேற்பார்வையிடுதலை, இக்குழு கவனிக்கும்.

- பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி, வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுக்கவும், கடத்தலுக்கு எதிராக பிரசாரம் செய்யவும், சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தால், அவர்களின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்கவும் அதற்காக செயல்படும் அமைப்புகளுக்கு புத்தாக்க பயிற்சி இத்துறையின் மூலம் அவ்வப்போது அரசு மற்றும் யூனிசெப் போன்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

### 7.11.2 எளிதில் வன்செயல்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதிக்கான திட்டம்

கடத்தலிலிருந்து மீட்கப்படும் மகளிருக்கு அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மறுவாழ்விற்கு நிதியுதவியாக **₹10,000** வழங்க தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை **209** பாதிப்பிற்குள்ளான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**‘உஜ்ஜவாலா’ திட்டம்**

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் சுரண்டலுக்காக கடத்தப்படுவதென்பது மனித உரிமைகளை மீறும் குற்றமாகும். கடத்தலுக்குள்ளாகக் கூடிய வாய்ப்பு மிகுதியாக உள்ள பகுதிகளில், கடத்தலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

மேற்கண்ட பிரச்சினையை சமாளிக்க, இந்திய அரசு, ‘உஜ்ஜவாலா’ என்றொரு விரிவான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் ஆட்கடத்தலைத் தடுக்கவும், வணிக ரீதியான பாலியல் சுரண்டலைத் தடுக்கவும், கடத்தபட்டவர்களை மீட்டு, மறுவாழ்வளித்து, சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்கிறது. மத்திய, மாநில மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முறையே 60:30:10 என்ற நிதி பங்களிப்போடு தமிழ்நாட்டில் இத்திட்டம், எட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**போதை தடுப்புத் திட்டம்**

மத்திய அரசின் நிதியுதவியுடன், போதைத் தடுப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், ஒருங்கிணைந்த மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்களில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சுமார் 21 நாட்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் 26 மையங்கள், இந்திய அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இயங்கி வருகின்றன.

## 7.12 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

மனித வள மேம்பாட்டிற்கான தேசிய திட்டங்களில் குழந்தைகளுக்கான திட்டங்களுக்கு பிரதானமான இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதை 1974 ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான தேசியகொள்கை அங்கீகரித்துள்ளது. இந்திய அரசானது ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையினை 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் ஏற்றுக்கொண்ட நிலையில், கடந்த 2004 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 9ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2003ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான தேசிய சாசனம், ஒவ்வொரு குழந்தையும் குழந்தையாக இருப்பதற்குரிய உள்ளார்ந்த, உள்ளடக்கிய உரிமை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தையே வலியுறுத்துகிறது.

2003 ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான தேசிய சாசனம் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டம் தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் உருவாக்கிட வழிவகை செய்கிறது. தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் கடந்த

18.01.2013 முதல் தமிழகத்தில் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் பின்வருமாறு:—

| அதிகாரங்கள் | செயல்பாடுகள் |
|---|---|
| இவ்வாணையம் உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டம், 1908—ன்படி வழக்குகளை விசாரிப்பதற்கு உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்கள் கொண்டதாகும். | குழந்தைகள் தொடர்பான கீழ்க்காணும் சட்டங்களின் அமலாக்கத்தினை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்<br>அ) குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005.<br>ஆ) குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1986.<br>இ) இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.<br>ஈ) குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006<br>உ) குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009.<br>ஊ) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012. |
| காவல் துறை மற்றும் பிற அரசு துறை அலுவலகங்களிலிருந்து குழந்தை உரிமை மீறல் தொடர்பான உரிய ஆவணங்களைக் கோரிப் பெறுதல். | ➢ குழந்தை உரிமை மீறல்கள் மீது விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட அரசுத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்தல்.<br>➢ குழந்தை உரிமைகள் குறித்து |

| | |
|---|---|
| பாலியல் குற்றங்கள் மற்றும் பாலியல் சட்டம் 2012ன் கீழ் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தல் | பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.<br>➢ ஊடகங்கள், பொதுமக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து பெறப்படும் குழந்தை உரிமை மீறல்கள் தொடர்பான புகார்கள் அடிப்படையில் மட்டுமின்றி குழந்தை உரிமை மீறலாகக் கருதப்படும் இனங்களில் ஆணையம் தானாக முன்வந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளல்.<br>➢ குழந்தை உரிமைகள் பாதுகாப்பு குறித்து அரசு / அரசு சாரா நிறுவனங்களின் அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்கங்கள் நடத்துதல்.<br>➢ குழந்தை நலன் சார்ந்த கொள்கைகளை வடிவமைத்தல். |
| உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உரிய நிவாரணம் மற்றும் உரிய மறுவாழ்வு நடவடிக்கை குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல். | |

## குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009

தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 (RTE Act) பிரிவு 31ன்படி, தமிழகத்தில் இச்சட்டத்தின் செயலாக்கத்தினை கண்காணித்து வருகிறது.

மேலும், இவ்வாணையம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டம், 2009ன் பிரிவு12(1C)ன்படி, தனியார் மற்றும் அரசு

மானியம் பெறும் பள்ளிகளில், சமூகத்தில் நலிந்த மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகளுக்கான 25% பள்ளிச் சேர்க்கையினை உறுதி செய்யும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

**பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012**

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 44ன்படி, தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது, தமிழகத்தில் இச்சட்டம் நடைமுறைப்படுத்துதலை கண்காணித்து வருகிறது.

**இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015**

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 பிரிவு 109ன்படி, இச்சட்டத்தின் செயலாக்கத்தினைக் கண்காணிக்கும் அதிகாரம் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆணையத்தால் கையாளப்பட்ட வழக்குகள்**

இவ்வாணையம் துவங்கப்பட்ட நாள் (18.01.2013) முதல் இந்நாள்வரை செய்திதாள் மற்றும் ஊடகங்கள், பொதுமக்கள்/தொண்டு நிறுவனங்கள், தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் இதர அமைப்புகள்

மூலம் வரப்பெற்ற பல்வேறு குழந்தை உரிமைகள் மீறல்கள் தொடர்பான 1072 வழக்குகளைக் கையாண்டு தீர்வு செய்துள்ளது. இவ்வாணையத்தின் மின்னஞ்சல் முகவரி scpcrtn@gmail.com மற்றும் இணையதள முகவரி www.scpcr.tn.gov.in

**2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு ₹53.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

### 7.13 குழந்தைப் பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

குழந்தைப் பாதுகாப்பு என்பது பரந்த எல்லையைக் கொண்டதாகும். எனவே குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலுள்ள பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. பல்வேறு துறைகளிலுள்ள குழந்தைகளுக்கான பலதரப்பட்ட சேவைகளை ஒருங்கிணைந்து செயல்படுத்த சமூகப் பாதுகாப்புத் துறை ஒரு பாலமாக செயல்படுகிறது.

சமூக நலம், கல்வி, தொழிலாளர் நலம், அனைவருக்கும் கல்வித் திட்டம் (SARVA SHIKSHA ABHIYAN), தேசிய குழந்தைத் தொழிலாளர் தடுப்புத் திட்டம், இரயில்வே காவல், வருவாய், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், ஊரக

வளர்ச்சி, உள்ளாட்சி, மருத்துவம் மற்றும் சுகாதாரம், காவல், நீதி மற்றும் மாற்றுத் திறானாளிகள் நலம் ஆகிய துறைகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பினை சமூகப் பாதுகாப்புத் துறை கொண்டுள்ளது.

குழந்தைகளுக்கான சேவைகள் வழங்கக்கூடிய பல்வேறு துறைகளை உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட அளவிலான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வலிமையான மாவட்ட அளவிலான செயலமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்கள் மற்றும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு குழுக்களும் செயல்பாட்டில் உள்ளன. குழந்தைத் திருமணம், பாலியல் வன்கொடுமை, குழந்தை கடத்தல், பிச்சை எடுத்தல், சுரண்டல், குழந்தைத் தொழில் மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தலிலிருந்து தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சமூகப் பாதுகாப்பு துறையால் நடத்தப்பட்டுள்ளன.

### 7.14 சமூகப்பாதுகாப்புத் துறைக்கான இணைய தளம் மற்றும் மின்னஞ்சல்

இத்துறைக்கான இணையதள முகவரி **www.socialdefence.tn.gov.in** மற்றும் மின்னஞ்சல் முகவரி **dsd.tn@nic.in**

*******

## அத்தியாயம்–8

# சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களான ஆதரவற்ற மற்றும் ஏழை, வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயது மற்றும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர்களைப் பாதுகாப்பதற்காக சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் வகையில் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ₹1,000/– ஆக வழங்கி வருகிறது.

இந்த ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை கணிசமாக 2016–2017 ஆம் ஆண்டில் ₹3,949.97 கோடியாக உயர்ந்துள்ளது. 31.03.2017 அன்று 29,75,885 பயனாளிகள் கீழ்க்கண்டவாறு பயன்பெற்று வருகின்றனர்.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை 31.03.2017 அன்று வரை |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 13,04,357 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 56,217 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 5,28,794 |
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 2,18,572 |
| 5. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 4,17,564 |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம். | 3,10,514 |
| 7. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 1,14,248 |
| 8. | 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட திருமணமாகாத உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 21,141 |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம். | 4,478 |
| **மொத்தம்** | | **29,75,885** |

மத்திய அரசு கீழ்காணும் ஓய்வூதிய திட்டங்களுக்கு பகுதியாக நிதி வழங்குகிறது:-

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் | மத்திய அரசின் பங்களிப்பு |
|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 முதல் 79 வயது வரை | ₹200 |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேல் | ₹500 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 முதல் 79 வயது வரை | ₹300 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 40 முதல் 79 வயது வரை | ₹300 |

பயனாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் படியான ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளை 2015–2016 ஆம் ஆண்டு அரசு தளர்த்தி வயது வந்த மகன் / மகள் இருந்தாலும் அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வரும் பட்சத்தில் அவர்களும் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருந்தால் ஓய்வூதியம் பெறும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டது.

மேலும், அவர்களின் அசையா சொத்தின் மதிப்பு ₹5,000 மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு அதனை ₹50,000 ஆக உயர்த்தியுள்ளது. மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும் ஊனத்தின் தன்மை 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைத்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஒய்வூதிய திட்டங்களின் கீழ் ஒய்வூதியம் பெற கீழ்கண்டவாறு தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் |
|---|---|---|
| 1. | இந்திரா காந்தி முதியோர் ஒய்வூதிய தேசிய திட்டம். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 60 வயது அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2. | இந்திராகாந்தி விதவைகள் ஒய்வூதிய தேசியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ விதவையாக இருத்தல் வேண்டும். |
| 3. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஒய்வூதிய தேசியத் திட்டம் | ➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ ஊனம் நிலை 80% மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தபடும் சமூகப் பாதுகாப்பு ஒய்வூதிய திட்டங்களின் கீழ் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:-

| வ. எ ண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | ➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ ஊனத்தின் நிலை 40% மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000க்குள் இருத்தல் வேண்டும். |
| 2. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000க்குள் இருத்தல் வேண்டும்.<br>➢ விதவையாக இருத்தல் வேண்டும். |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000க்குள் இருத்தல் வேண்டும். |
| 4. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவரால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது |

| | | |
|---|---|---|
| | | நீதிமன்றத்தில் இருந்து சட்டப்பூர்வமாக பிரிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000க்குள் இருத்தல் வேண்டும். |
| 5. | 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட திருமணமாகாத உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்களுக்கான ஒய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000க்குள் இருத்தல் வேண்டும். |

உயிர்ப்புள்ளி அட்டையைப் (Bio-metric Smart Card) பயன்படுத்தி, பயனாளிகளை உறுதி செய்து வங்கிகள் மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களை வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. **31.03.2017** நிலவரப்படி மொத்தமுள்ள **29,75,885** பயனாளிகளில் **29,75,033** பயனாளிகளுக்கு வங்கிகள் மூலமாகவும் இதர பயனாளிகளுக்கு அஞ்சலகங்கள் மூலமாகவும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுக்கு இரு முறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண்

ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது:-

- ❖ அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.
- ❖ அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

**விபத்து நிவாரணத் திட்டம்**

44 வகையான தொழில்களில் ஈடுபட்டுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த வருமானம் ஈட்டும் பிரதான நபர் விபத்தின் மூலம் மரணமடையும் போது வாரிசுதாரருக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை ₹15,000லிருந்து ₹20,000ஆக, 31 டிசம்பர், 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**நலிந்தோர் நிவாரணத் திட்டம்**

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் இயற்கை மரணமடையும் பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த

நிவாரணத் தொகை ₹10,000த்திலிருந்து ₹20,000 ஆக, 31 டிசம்பர், 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**Dr.V.சரோஜா**
**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்**

## பிற்சேர்க்கை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு – 2017–2018

## மானியக் கோரிக்கை எண்.45

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**2017–2018** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ₹**478117**.21 இலட்சம்.

| **2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு** | | |
|---|---|---|
| | | **(₹இலட்சத்தில்)** |
| **கணக்குத் தலைப்பு** | | **ஒதுக்கீடு** |
| **வருவாய் பகுதி** | | |
| **2059** | பொதுப் பணிகள் | 262.50 |
| **2225** | சமூக நல இயக்ககம் | 30.26 |
| **2235** | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 15082.27 |
| **2235** | சமூக நல இயக்ககம் | 101428.71 |
| **2235** | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 8150.95 |
| **2236** | தலைமைச் செயலகம் | 23.16 |
| **2236** | சமூக நல இயக்ககம் | 168737.00 |
| **2236** | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 183566.74 |
| **2251** | தலைமைச் செயலகம் | 431.56 |
| **2551** | சமூக நல இயக்ககம் | 0.01 |
| **வருவாய் பகுதி மொத்தம்** | | **477713.16** |
| **மூலதனப் பகுதி** | | |

| | | |
|---|---|---|
| **4235** | சமூக நல இயக்ககம் | - |
| **4235** | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 404.01 |
| **4236** | சமூக நல இயக்ககம் | 0.01 |
| **4236** | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 0.01 |
| **மூலதனப் பகுதி மொத்தம்** | | **404.03** |
| **7610** | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 0.02 |
| **கடன் பகுதி மொத்தம்** | | **0.02** |
| **பெரு மொத்தம்** | | **478117.21** |

பெரு மொத்தம் :

வருவாய் பகுதி :: ₹ **477713.16** இலட்சம்

மூலதனப் பகுதி : ₹ **404.03** இலட்சம்

கடன் பகுதி : ₹ **0.02** இலட்சம்

**மொத்தம் : ₹ 478117.21 இலட்சம்**

**அல்லது**

**₹ 4781.17 கோடி**

**2017–2018**ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.**41**ன் கீழ் **₹3929.28** கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*******